# பாட்டாளி சிந்தனை

Volume 26 No. 12

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா

SUCI

August 2016

தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்

விலை ரூ 3

## பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்களை நினைகூர்வோம்!



28 நவம்பர் 1820 – 5 ஆகஸ்ட் 1895

**பிரெட்ரிக் எங்கெல்ஸ்**



5 ஆகஸ்ட் 1923 – 5 ஆகஸ்ட் 1976

**சிப்தாஸ் கோஷ்**

## முழு அளவிலான அந்நிய நேரடி முதலீட்டு சீர்திருத்தங்கள்

# இந்திய மக்களுக்கு இருளைக் கொண்டுவரும் பாதை

“காங்கிரஸ் தேசத்தை அந்நியர்களுக்கு தாரை வார்க்கிறது. பெரும்பாலான கட்சிகள் எஃப்டிஐ–ஐ எதிர்க்கின்றன, ஆனால் மத்திய புலனாய்வுத் துறையின் மிரட்டலால் சில எம்பிக்கள் வாக்களிக்கவில்லை, அதனால், காங்கிரஸ் கொள்ளைப்புற வழியாக நாடாளுமன்றத்தில் வெற்றிபெற்றுவிட்டது.”

இதை முந்தைய காங்கிரஸ் அரசாங்கம் தனது பாராளுமன்ற பலத்தின் உதவியோடு எஃப்டிஐ அறிமுகப்படுத்தியதைக் குறிப்பிட்டு 5 டிசம்பர் 2012இல் மோடி கூறினார். தற்போது 3 1/2 ஆண்டுகள் கழித்து பிரதமர் மோடி பல்டி அடித்து 20 ஜூன் 2016 அன்று “அரசாங்கத்தின் அனுமதி யோடு இ–காமர்ஸ் உள்ளிட்ட வர்த்தகத்திற்காக 100% அந்நிய நேரடி முதலீட்டை (எஃப்டிஐ) அனுமதிக்க தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது” என்று அழுத்தமாகக் கூறியிருக்கிறார்.

ஆட்சியில் உள்ளபோது ஒன்றும் எதிர்க் கட்சியாக இருக்கும்போது அதற்கு நேர் மாறாக மற்றொன்றும் பேசுவது பூர்ஷ்வா அரசியல் வாதிகளுக்கு சகஜமான ஒன்றுதான். ஆனால், இங்கே உண்மை சற்று ஆழமானது. எஃப்டி–க்கு மடைக்கதவைத் திறந்துவிடுவதற்கு ஆளும் இந்திய ஏகபோகங்களின் ஆசைதான் இறுதியான முதன் மையான காரணமாகும். அமெரிக்க ஏகாதிபத்தியம் உள்ளிட்ட பெரும் ஏகாதிபத்திய நாடுகளுடன் எப்படியாவது சேர்ந்துகொண்டு ஆசிய வல்லரசா கவும் வலுவான உலக சக்தியாகவும் வளரவேண்டும் என்ற தங்களது வர்க்க நோக்கத்தை நிறைவேற்று வதற்கான பொருளாதார மற்றும் அரசியல் திட்டத்தின் ஒருபகுதிதான் இது. அவர்களது நம்பிக்கைக்குரிய அரசியல் மேலாளர்களான காங்கிரஸ் மற்றும் பாஜக என யார் அரசாங்க அதிகாரத்தில் இருந்தாலும், இந்தக் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை.

ஆளும் வர்க்கத்தின் விருப்பத்திற்கிணங்க, நீண்ட காலத்திற்கு முன்பே காங்கிரஸ் இம்முயற்சியை துவங்கியது. ஒரு காலத்தில் இதே காங்கிரஸ்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகப் போராடியது, அதன் தலைவர்கள் அந்நியப் பொருட் களுக்கு எதிராகப் போராடினர், வெளிநாட்டு மூலதனத்தை பறிமுதல் செய்வதை மையக் கோரிக் கையாகக்கொண்டு மக்களின் ஏகாதிபத்திய–எதிர்ப்பு இயக்கத்திற்கு தலைமை தாங்கினர். ஆனால் மக்களின் ஏகாதிபத்திய–எதிர்ப்பு உணர்வு வலுவாக இருந்ததால் சுதந்திரத்திற்குப் பிறகு சிறிது காலம் அந்த கோரிக்கையை உயிரோடு வைத்திருந்தனர்.

தொடர்ச்சி 2ம் பக்கம்

## சீனப்பொருளாதாரத்தின் வீழ்ச்சி

# 'சோசலிச சந்தைப் பொருளாதாரம்' என்ற பெயரில் நடைபெறும் அப்பட்டமான முதலாளித்துவம்

மூர்ச்சையடைந்துள்ளது சீனப்பொருளாதாரம். பொருளாதாரம் வளர்கிறதா தேய்கிறதா என்று அளப்பதற்கு முதலாளித்துவ பொருளாதாரவாதிகள் வைத்துள்ள குறியீடாகிய ஜிடிபி (Gross Domestic Production) எனப்படும் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2015ம் ஆண்டிற்கு 6.9% என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 2 பத்தாண்டுகளாக 10%க்கும் அதிகமாக இருந்த ஜிடிபி இந்த அளவிற்கு குறைந்துவிட்டது. கடந்த 25 ஆண்டுகளில் இதுவே மிகக்குறைவாகும். உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் என்று தன்னைத்தானே சொல்லிக்கொள்ளும் சீனாவை பல ஆண்டுகளான மந்தத்தன்மை என்ற கோரப்பற்கள் பலமாக கடிக்கின்றன என்பதையே இது காட்டுகிறது. இதன் பிடி சற்றேனும் தளரும் என்பதற்கான அறிகுறி சற்றும் காணோம். நிறைய சீனத் தொழில்கள் முடங்கிவிட்டன. பொருளா தாரத்தின் பிரதான தூணாகத் திகழும் உற்பத்தித் துறை வீழ்ச்சியுற்று வருகிறது. இத்துறையில் பணியிடங்கள் குறைக்கப்படுகின்றன. ஏற்றுமதியை நோக்கிய உற்பத்தியில் பாரம்பரியமான சாதக நிலைமைக்கு திரும்பச்செல்வதற்காக சமீபத்தில் தனது கரன்சி மதிப்பை 4.4% அளவிற்கு குறைத்தது. மேலும் தனது முக்கியமான அதிகாரபூர்வ வட்டி விகிதம் மற்றும் கையிருப்பு தேவை விகிதாசாரம் ஆகிய இரண்டையும் குறைத்து உயர்ந்து வரும் விலைவாசி உழைக்கும் மக்கள் வாழ்வை மிகுந்த சிரமமிக்கதாக ஆக்கியுள்ளது. அவர்களது வாழ்க்கைத் தரத்தை வீழ்த்தி வருகிறது. சீனாவின் பணவீக்கத்தை அளப்பதற்கான கருவியாகிய நுகர்வோர் விலைக் குறியீடானது வருடாந்தர அளவில் கடந்த (2014) நவம்பரைவிட 2015 நவம்பரில் 6.9% அதிகரித்துள்ளது. இந்த கணக்கீடு மிகவும் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ள தாக கூறப்படுகிறது. அப்படியிருந்தும் கடந்த 11 ஆண்டுகளில் இது உச்சபட்ச பணவீக்கமாக உள்ளது. உயர்ந்துவரும் நுகர்வோர் விலைக்குறியீட்டால் வளங்கள் மற்றும் பயன்பாட்டுப்பொருட்களின் விலை நிர்ணயம் செய்யும் இயங்குமுறையை சீர்திருத் தலாமா வேண்டாமா என்ற மனக்கிலேசத்திற்கு சீனாவின் மத்திய அரசாங்கம் ஆளாகியுள்ளது. நுகர்வோர் விலைக்குறியீட்டுக்கலனில் மூன்றில் ஒரு பங்காக விளங்கும் உணவு விலைகள் முதல் 10 மாதங்களில் 11.3% அதிகரித்து. தேசிய நுகர்வோர் விலையேற்றத்தில் இது 84% ஆகும். 1988–95 ஆண்டுக் காலத்தில் 3.9 சதவிகிதமாக இருந்த சீனாவின் வேலை

தொடர்ச்சி 5ம் பக்கம்

## அந்நிய நேரடி முதலீட்டு சீர்திருத்தம்

# ஏகபோகங்களின் திட்டத்திற்கு வடிவம் கொடுக்க காங்கிரஸும் பாஜகவும் முயற்சிக்கின்றன

1ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் ஏகாதிபத்திய உலகமயம்–தாராளமயக் கொள்கைகள் நெருக்கடியில் சிக்கிய உலகின் முதலாளித்துவ நாடுகளைக் கவ்விய உடன், முதலாளித்துவ இந்தியாவின் ஆட்சிப்பொறுப்பில் அப்போது இருந்த நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கம் தன் போக்கை மாற்றிக் கொண்டது. அதிலிருந்து படிப்படியாக சில்லரை வர்த்தகம், வங்கி, காப்பீடு, கல்வி, மருத்துவம், ஏன் பாதுகாப்பு என புதிய புதிய துறைகளில் எஃப்டிஐ–இன் வரம்பை அதிகரித்துக்கொண்டே வருகின்றனர். அந்தப் போக்கின் தொடர்ச்சியாகவே தற்போதைய நடவடிக்கையும் இருக்கிறது.

சமீபத்தில் பிரதமர் நரேந்திரமோடி தனது அமெரிக்க பயணத்திற்கு முன்பாக ஏராளமான எஃப்டிப்ஐ கொள்கைகளை அறிவித்தார், பின்னர் அது 20 ஜூன் 2016இல் அரசாங்கத்தால் ஒப்புதல் தரப்பட்டது. இதில் உள்நாட்டு விமானப்போக்குவரத்து உள்ளிட்ட விமானத்துறை மற்றும் உணவு உற்பத்தித்துறையில் 100% எஃப்டிஐயும் அடங்கும். ஆயுத சட்டம் 1959இன் வரம்பிற்குள் உள்ள சிறிய ரக ஆயுதங்கள் மற்றும் தளவாடங்களை உற்பத்தி செய்தல் உள்ளிட்ட பாதுகாப்பு தொழிற்சாலைகளில் எஃப்டிஐ விதிகளை மேலும் தளர்த்துதல், மருந்து தொழில்களில் 74% வரை எஃப்டிஐ அனுமதித்தல், தனியார் பாதுகாப்பு ஏஜென்சிகளின் எஃப்டிஐ உச்சவரம்பை 74% வரை உயர்த்துதல், ஒற்றை பிராண்ட் சில்லரை வர்த்தகத்திற்கான மூலப் பொருட்களை உள்ளூரில் வாங்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை நீக்குதல், டிடிஹெச், கேபிள் டிவி, மொபைல் டிவி, டெலெபோர்ட்ஸ் போன்ற ஒளிபரப்புத்துறைகளின் பல்வேறு பிரிவுகளில் 100% எஃப்டிஐ–யை அனுமதித்தல், விலங்குகள் பராமரிப்பு மற்றும் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்களை விற்பனை செய்வதில் இகாமர்ஸ் போன்றவற்றின் வழியாக எஃப்டிஐ–யை குறிப்பிடத்தக்க அளவு அனுமதித்தல் போன்றவை இந்தக் கொள்கையில் அடங்கியுள்ளன.

### எஃப்டிஐ என்றால் என்ன?

முதலில் கேள்வி என்னவெனில் எஃப்டிஐ என்றால் என்ன? எளிய வார்த்தைகளில் கூறினால் எஃப்டிஐ (அந்நிய நேரடி முதலீடு) என்றால் உள்ளூர் தொழிலில் வெளிநாட்டு நிறுவனம் முதலீடு செய்து பங்குதாரராகலாம் என்று அர்த்தமாகும். எஃப்டிஐ–இல் இரண்டு வகைகள் உள்ளன பச்சைக் களம் (கிரீன் பீல்டு) மற்றும் காப்பிநிறக்களம் (பிரவுன் பீல்டு). ஒரு புதிய திட்டத்தில் எஃப்டிஐ வந்தால் அது பச்சைக்களம். ஜப்பானிய நிறுவனமான டொயோடோ மோட்டார் தனது மூலதனத்தை முதலீடு செய்து இந்தியாவில் புதிய தொழிற்சாலையை உருவாக்கினால் அது பச்சைக்களம். ஆனால், இந்திய நிறுவனமான டாடா ஸ்டீல்ஸ், ஏற்கனவே இங்கிலாந்தில் இயங்கிவரும் ஸ்டீல் தொழிற்சாலையை வாங்கினால் அது காப்பிநிறக்களம்.

ஆனால் ஒரு ஏகபோக நிறுவனம் அல்லது தொழிற்குழுமம் எதற்காக வெளிநாட்டில் முதலீடு அல்லது சரியாகச் சொன்னால் எதற்காக மூலதனத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது? நிச்சயமாக அது அறப்பணிக்காகவோ அல்லது நல்லெண்ண நோக்கத்திற்காகவோ அல்ல. முதலாளித்துவ விதியின் படி இந்த ஏகபோக கட்டத்தில் அதிகபட்ச லாபத்தை அடைவதே இதன் நோக்கம் என்பது வெளிப்படையான உண்மை. எப்படி ஏன்? அதில் உற்பத்தி செலவைக் குறைப்பது என்பதும் ஒரு காரணியாகும். வெளிநாட்டில் முதலீடு செய்ய களத்தை தேடும்போது, முதலீட்டாளர்கள் உற்பத்தி செலவைக் குறைப்பதற்காக மூலப்பொருட்களின் செலவைக் குறைப்பதற்கான வழியைத்தேடுகின்றனர். (இன்று இதில் மின்சாரம், போக்குவரத்து மற்றும் நிலம் உள்ளிட்ட கட்டமைப்பு ஆகியவற்றின் விலைகள் அடங்கியுள்ளது) அதேபோன்று முடிந்த அளவு குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்கள் கிடைப்பார்களா என்பதை ஆய்வு செய்கிறார்கள்.

எஃப்டிஐ–ஐ ஈர்க்கும் முயற்சியில் நரேந்திர மோடி 'மேக் இன் இந்தியா' எனும் கோஷத்தில் உற்பத்தி செலவைக் குறைப்பதை அந்நிய ஏகபோகங்களுக்கும் கார்ப்பொரேட் முதலைகளுக்கு உத்திரவாதம் அளித்துள்ளார். எனவே ஒருநாட்டு ஏகபோக முதலாளிகள் மற்றொரு நாட்டின் மலிவான உழைப்பு, மூலப்பொருட்கள், மற்றும் இதர தேவைகளை சுரண்டுவதற்காக தங்களது மூலதனத்தை அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதே எஃப்டிஐ ஆகும். இது நிதி மூலதனத்தை ஏற்றுமதி செய்வது என்பதாகும், இதைத்தான் ஏகாதிபத்தியம் என்று லெனின் வரையறுத்தார். இந்த போக்கில் ஏகாதிபத்தியம் என்பது ஆதாயம் அல்ல தங்களுக்கு பெரும் தீமையே என்பதை பாதிக்கப்படும் கோடிக் கணக்கானவர்களும் இதனை கண்ணுற்றும் அறிவு ஜீவிகளும் தங்களது அனுபவத்தின்மூலம் உணர்ந்துள்ளனர். இதற்கு முன்பு ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் ஈவிரக்கமற்ற அடக்குமுறை காலனியாதிக்க ஆட்சியின் மூலமாக காலனி நாடுகளின் உள்ள இயற்கை வளங்களையும் மனித சக்தியையும் எல்லையற்று கொள்ளையடித்தனர். ஆனால் இன்று, நவீன–காலனியாதிக்கம் என்ற வடிவில் நிதி மூலதனம் மேலாதிக்கம் செலுத்துவதும் (காலனி நாடுகளை நேரடியான ஆட்சி மூலமாக அல்லாமல் குறிவைக்கப்பட்ட நாடுகளை மறைமுக பொம்மை ஆட்சியின்மூலமாக காலனிச் சுரண்டலில் ஈடுபடுதல்) அல்லது எஃப்டிஐ வழியிலும் திவாலான நாடுகளுக்கு வட்டியினடிப் படையில் நிதியுதவி செய்வதுவுமாகும். எஃப்டிஐ அதிரடியாக வேகமாக நுழைவதால் ஏற்கனவே அடக்குமுறை முதலாளித்துவ சுரண்டலின் சுழல் சக்கரத்தில் நசுங்கி அழுந்திவரும் மக்களின் வறுமையும் தரித்திரமும் அதிகரிக்கவே செய்கிறது.

### எஃப்டிஐ ஆதரவாளர்கள் மக்களை எவ்வாறு ஏமாற்றுகின்றனர்?

எஃப்டிஐ–யானது பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் என்றும், அது நவீன தொழில்நுட்ப மற்றும் வியாபாரக் கோட்பாடுகளைக் கொண்டுவரும் என்றும் அதேபோல் விலைவாசி குறையும் என்றும் இது கடைகோடி நுகர்வோருக்கு பலனளிக்கும் என்று ஆளும் ஏகபோகங்களின் அரசியல் ஊதுகுழலான பூர்ஷ்வா அரசாங்கமும் எஃப்டிஐ–இன் ஆதரவாளர்களும் வாதிடுகின்றனர். அத்தியாவசியமான மூலதனப்பற்றாக்குறையும் அது நிவர்த்தி செய்யும் என்றும் கூறுகின்றனர். எல்லாவற்றிற்கும் மேலாக எஃப்டிஐ–இன் வரவு அதிகமானால் அது ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்குமென்றும் விவசாயிகளின் வருவாய் ஏற்றத்திற்கும் வழிவகுக்கும் என்றும் கூறுகின்றனர். இது உண்மையா?

முதலில் இந்தியாவில் உண்மையிலேயே முதலீட்டிற்கான மூலதனப் பற்றாக்குறை உள்ளதா? உலகின் எட்டாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா பார்க்கப்படுகிறது. உலக முன்னணி பணக்காரர்கள் வரிசையில் இந்திய ஏகபோகங்கள் உள்ளனர், வெளிநாடுகளிலும் ஏராளமாக முதலீடு செய்துவருகின்றனர். ஆக, மூலதனப் பற்றாக்குறை என்று தீய நோக்கத்தோடு தவறான இது போன்ற கட்டுகதைகளைப் பரப்பிவருகின்றனர்.

அடுத்ததாக, பொருளாதார வளர்ச்சி என்ற கேள்வியை எடுத்துக்கொள்வோம். பூர்ஷ்வா பொருளாதாரவாதிகள் மற்றும் அரசாங்கங்களைப் பொறுத்தமட்டில் பொருளாதார வளர்ச்சியென்பதன் அர்த்தம் ஜிடிபியை அதிகரிப்பதுவேயன்றி, மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதல்ல. எஃப்டிஐ அருமருந்தாக இருக்கும் என்றால், ஏற்கனவே தாராளமாக எஃப்டிஐ விதிகளை தளர்த்திய நாடுகள் பொருளாதார வீழ்ச்சியை, அல்லது வளராத ஜிடிபி மற்றும் தேக்கநிலையை சந்திப்பது ஏன்? இதற்கு ஐரோப்பிய யூனியன் நாடுகளும், பல ஆப்பிரிக்க மற்றும் தென் அமெரிக்க நாடுகளும் வெளிப்படையான உதாரணங்களாக இருக்கின்றன.

அடுத்ததாக, எந்தவொரு கட்டுப்பாடும் இன்றி அல்லது வலுவான உள்நாட்டு பொருளாதார அளிப்பாளர்கள் (சப்ளையர்ஸ்), சந்தைகள் மற்றும் தொழில்நுட்ப தகுதி இல்லாமல் தங்களது பொருளாதாரத்தை அந்நிய முதலீடுகளுக்குத் திறந்துவிடும் நாடுகள் இறுதியாக பலவீனமான நோய்வாய்ப்பட்டுள்ள தங்களது பொருளாதாரத்தை இழக்கின்றன. இது ஊசிபோட்டு ஒருவரை கொழுக்க வைப்பது போன்றதாகும்.

அடுத்ததாக நவீன தொழில்நுட்பத்தாலும் விலைவாசி குறைவாலும் கடைநிலை நுகர்வோருக்கு பலன்கிடைக்கும் என்ற வாதத்திற்கு வருவோம். ஏற்கனவே இந்திய கார்ப்பொரேட்டுகளுக்கு சொந்தமான ஸ்பென்சர், பிக் பஜார், ஷாப்பர்ஸ் ஸ்டாப், ரிலையன்ஸ் பிரஷ் போன்ற வணிக வளாகங்கள் (மால்கள்) சில்லரை வர்த்தகத்தில் ஏகபோகங்கள் பெருமளவில் நுழைந்துவிட்டன. அவைகள் பத்தாண்டுகளுக்கு முன்பாகவே சிறிய பெட்டிக்கடைகளின் 98 சதவீத உள்நாட்டு சில்லரை சந்தையை பறித்துவிட்டன. இது விலைவாசியைக் குறைத்துவிட்டதா அல்லது வேலைவாய்ப்பை உருவாக்கிவிட்டதா? ஏராளமான சிறு அங்காடிகள் குறிப்பாக நகர்புறங்களில் ஒன்று மூடப்பட்டுவிட்டன அல்லது அவற்றின் அளவு குறைந்துவிட்டது ஏனெனில் கண்கவர் பெரிய கடைகளில் பல்வேறு வகையான பொருட்களை ஒரே இடத்தில் கொடுக்கும் மிகப்பெரிய கடைகளோடு இவைகளால் போட்டியிட முடியவில்லை. இதனால் இந்த சிறு அங்காடிகளில் பணியாற்றிய ஏராளமானவர்கள் வேலையிழந்தனர். மாறாக, புதிதாக வந்த வணிக வளாகங்களில் குறைந்த அளவு வேலைவாய்ப்பே உருவாயின. மாநகரங்கள் அல்லது நகரங்களில் உள்ள பன்னாட்டு சில்லரை வர்த்தகக் கடைகளில், ஆசையாகப் பேசக்கூடிய சந்தைத் திறன்மிக்க சில ஆயிரம் பேருக்கு வேலை வழங்கினாலும் அதே வேளையில் எண்ணிலடங்கா சிறுகடைகளையும் நிறுவனங்களையும் அழிப்பதோடு நூறாயிரக் கணக்கானவர்களை வேலையிழக்க செய்கிறது.

எனவே சில்லரை வர்த்தகத்தில் கணக்கு வழக்கற்ற அந்நிய நேரடி முதலீடு நிலைமையை மேலும் மோசமாக்கிவிடும். உதாரணத்திற்கு, சிறு கடைகளில் ஒரு ஊழியரின் விற்பனை அளவு ரூ78,000 என்றால் அது வால் மார்ட்டில் ரூ74.18 லட்சமாக அதாவது 95 மடங்கு அதிகமாக இருப்பதாக 2007இல் வெளியான ஒரு அறிக்கை தெரிவிக்கிறது. ஏனெனில் வால் மார்ட் தனது கடைகளில் தானியங்கி தொழில்நுட்பத்தையும் நவீன வியாபார யுக்திகளையும் பயன்படுத்தி தொழிலாளர்களின் எண்ணிக்கையை பெருமளவில் அதிக லாபமீட்டுகின்றன. சர்வதேச அளவில், 10,195 ஊழியர்களைக் கொண்டுள்ள வால்மார்ட் அதன் ஒரு கடையில் மட்டும் ரூ80,330 கோடி வர்த்தகம் செய்கிறது. தோராயாமாக 10 லட்சம் மக்கள்தொகை கொண்ட நகரங்களில் வால்மார்ட் தனது கடைகளை திறந்து வால்மார்ட்டின் சராசரி விற்பனையை ஒவ்வொரு கடையிலும் எட்டினால் அது சிறிய சில்லரை வர்த்தகத்தில் ஈடுபடும் சுமார் 4,32,000 பேரை வேலையிலிருந்து வெளியேற்றிவிடும் என்று ஒரு தோராயக் கணக்கீடு கூறுகிறது. தற்போது உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து விலைக்கு வாங்க வேண்டிய கட்டாயம் என்ற ஷரத்து நீக்கப்படுவதால் அது பன் – வியாபாரக் குறி (மல்டி பிராண்ட்) சில்லரை வர்த்தகத்திலும் ஈடுபட வழிவகுக்கும்.

பெரிய அந்நிய நிறுவனங்கள் அல்லது எஃப்டிஐ முதலீட்டார்கள் இந்தியா மற்றும் வெளிநாடுகளில் பெருமளவில் வாங்கி இங்குள்ள உள்நாட்டு சந்தையில் குறைந்த விலைக்கு முதலில் விற்கத் தொடங்கும், இது சிறிய சில்லரை வியாபாரிகளை சீர்குலைத்துவிடும். சிறிய வியாபாரிகள் அழிக்கப்பட்ட உடன் அவர்கள் அதிக விலையை நிர்ணயித்து நுகர்வோரை உறிஞ்சுவர். அதேபோல் வால்மார்ட் அல்லது கேர்ரெஃபோர் போன்ற அந்நிய பகாசுர முதலைகள் இந்திய சந்தைக்குள் நுழைந்தால் சரிசமமற்ற ஏற்றத்தாழ்வான போட்டியின் மூலம் உள்நாட்டு முதலைகளான ஸ்பென்சர்ஸ் அல்லது பிக் பஜார் போன்ற பெரிய நிறுவனங்கள் கூட நிற்க முடியாது. ஏற்கனவே பல பெரிய பிராண்ட் கடைகள் மூடப்பட்டுவருகின்றன. தென்னிந்தியாவில், சுபிக்ஷா, வட இந்தியாவில் விஷால் மற்றும் ஷப்கா பஜார் போன்றவை உடனடியாக நமது நினைவிற்கு வருகின்றன.

நுகர்வோருக்கு குறைந்த விலையில் பொருட்கள் கிடைக்கும் என்பது எஃப்டிஐக்கு வக்காலத்து வாங்கும் விசுவாசிகளின் மற்றொரு பித்தலாட்டமாகும். பிக் பஜாரோ வாக இருந்தாலும் அல்லது வால்மார்ட்டாக இருந்தாலும் அவைகளின் விலை ஒருபோதும் குறையப்போவதில்லை. பெரிய சில்லரை விற்பனை நிலையங்கள் உருளைக்கிழங்குகளையோ அல்லது கவனமாகத் தேர்வு செய்யப்பட்ட அது

தொடர்ச்சி 3ம் பக்கம்

## அந்நிய நேரடி முதலீட்டு சீர்திருத்தம்

# விவசாயிகள், தொழிலாளர்கள், வணிகர்கள், நுகர்வோருக்கு மிகப்பெரும் பேரழிவு

2ம் பக்கத் தொடர்ச்சி

போன்ற பொருட்களை பருவங்களிலோ அல்லது உற்பத்தியாளர்களிடம் ஏதாவது ஒப்பந்தம் செய்து கொண்டோ, ஒருவாரம் அல்லது சில நாட்களுக்கு என்று சிறிது காலத்திற்குவேண்டுமானால் விற்கலாம். அதைத் தவிர மற்ற பொருட்களுக்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டும். இப்படித்தான் பெரிய சில்லரை வர்த்தகக் கடைகள் செயல்படுகின்றன. இதை நியாயப்படுத்துவதற்காக எஃப்டிஐ–க்கு ஆதரவாக வாதாடும் கேபிஎம்ஜி நிபுணரின் பின் வரும் கருத்தை பார்ப்போம்; “ நுகர்வோர்களை இழுப்பதற்காக, (பெரிய) சில்லரை வர்த்தகர்கள் பொருள் வழங்குபவர்களை பிழிந்தெடுத்து சில அத்தியாவசிய பொருட்களின் விலையினை குறைப்பார்கள். இதனைச் சரிக்கட்ட கண்டவுடன் வாங்கத்தோன்றும் பொருட்களின் விலையை ஏற்றிவிடுவார்கள். (ஆனந்த் ராமநாதன், எகனாமிக் டைம்ஸ், 1 டிசம்பர் 2011)

ஆக, சில்லரை வர்த்தகத்தில் எஃப்டிஐ வந்தால் உணவுப் பணவிக்கம் குறையும் என்பது அப்பட்டமான பொய்யாகும். பதுக்கல்காரரர்கள், கள்ளச் சந்தைக்காரகள் மற்றும் விலை முறைகேட்டில் ஈடுபடுவர்கள், அதோடு நிர்வாக எந்திரத்தின் மோசமான நடத்தை மற்றும் ஊழலும் அதை அரசாங்கம் வேடிக்கையும் பார்க்கக்கூடிய அம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ள அழுகிய காலாவதியாகிப்போன முதலாளித்துவத்தின் உற்பத்திதான் பணவீக்கமாகும். சில்லரை வர்த்தகத்தில் எஃப்டிஐ ஊடுருவதற்கு உணவுப் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதில் எந்த பாத்திரமும் இல்லை. மாறாக அது நிலைமையை மேலும் மோசமடையவே செய்யும்.

சில்லரை வர்த்தகத்தில் எஃப்டிஐ நுழைய அனுமதித்தால் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்று கூறுவது மற்றொரு பொய்யாகும். மற்றவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடும் சமூக சேவையாகவும் முதலாளித்துவத்தின் கீழ் உள்ள திறந்த சந்தை என்பது செயல்படுவதில்லை. விவசாயிகளின் உற்பத்திப்பொருட்களுக்கு விற்க இடம் கிடைக்காததால் விவசாயிகளின் தற்கொலை எண்ணிக்கை அதிகரிக்கவில்லை. ஊழல்மலிந்த நிர்வாகம்–போலீஸ்–பதுக்கல்காரர்கள்–மோசடி இடைத்தரகர்கள்–ஆளும்கட்சி தலைவர்கள் அடங்கிய கொடிய கூட்டணியினர் கொள்முதல் இயந்திரத்தை முற்றிலுமாக தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு அடிமாட்டு விலைக்கு தங்கள் விவசாய விளைபொருட்களை விற்க நிர்ப்பந்திக்கப்படுவதால் தாங்கள் விளைவித்த பொருட்களுக்கு உரிய விலை கிடைக்காததால்தான் அவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

ஒரு கிலோ வெங்காயத்தை 50 பைசாவுக்கு விற்க விவசாயிகள் நிர்ப்பந்திக்கப்பட்ட நிலையில் அதே வெங்காயம் ஏகபோகங்கள் வசமுள்ள மிகப் பெரிய வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட சந்தையில் கிலோ ரூ20க்கு விற்கப்பட்டது சமீபத்தில் அம்பலமானது. இந்திய வியாபாரிகளே நமது விவசாயிகளை இவ்வாறு நடத்துகையில், வெளிநாட்டு சில்லரை வியாபாரிகள் நமது விவசாயிகளின் அவல நிலையைப் பார்த்து கண்ணீர் சிந்தி அவர்களுக்கு அதிக விலை கொடுப்பார்கள் என்று கூறுவது குழந்தைத் தனமானதாகும். 2004இல் ஐநா உணவு மற்றும் விவசாய அமைப்பின் பொருளாதார நிபுணர் ஆண்ட்ரூ ஷெப்பர்டு ஆய்வறிக்கையின்படி, பெரிய சூப்பர்மார்க்கெட்டுகள் அளவு, தரம், பொருட்களின் டெலிவரி போன்றவற்றில் தங்களது எதிர்ப்பார்க்கு ஏற்றவாறு இல்லை என்று கூறி சிறிய விவசாயிகளை தொழிலைவிட்டு வெளியேற்றுகின்றன. சமீபத்திய ஆக்ஸ்பம் ஆய்வின்படி, பத்தாண்டுகளுக்கு முன்பு காபி விவசாயிகள் 30 பில்லியன் டாலர் மதிப்புள்ள உலக சந்தையில் 10 பில்லியன் டாலர்கள் சம்பாதித்தனர். தற்போது 60 பில்லியன்டாலர் மதிப்புள்ள உலக சந்தையில் 6 பில்லியன் டாலருக்கும் குறைவாகவே பெறுகின்றனர். எனவே ஏகபோகங்களின் ஊடுருவலால் திறமை அல்லது அளவு அதிகரிக்கும் என்ற பகட்டு பரப்புரைகளால் காபி விவசாயிகளின் வருவாய் உயர்வதற்கு மாறாக அது கணிசமான அளவு குறைந்துள்ளது. பாடங்கள் தெளிவாக உள்ளன. ஏகபோக சில்லரை வியாபாரிகள் மொத்தமாக கொள்முதல் செய்வது தொடக்க உற்பத்தியாளர்களின் லாபத்தை கடுமையாக பாதிக்கிறது. மலேசியாவில் பிரம்மாண்டமான தனியார் சில்லரை வர்த்தக சங்கிலி உருவாக்கப்பட்டவுடன் விவசாய காய்கறி பொருட்கள் அளிப்போரின் எண்ணிக்கை 2001 இல் 200லிருந்து 2003இல் 30 ஆகக் குறைந்துவிட்டது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். வாங்குபவருக்கு அதிகமாக பிடி கிடைக்க கிடைக்க விற்பவருக்கு கிடைப்பது குறைவாகவேயிருக்கும். இதுதான் சுதந்திரமான சந்தை விதியாகும். உள்ளூர் பெரிய சில்லரை வர்த்தகர்கள் ஏற்கனவே செய்வதைக் காட்டிலும் வேறு எதையும் எஃப்டிஐ ஆல் சில்லரை வர்த்தகத்தில் எதுவும் செய்யமுடியாது.

சில்லரை வர்த்தகத்தில் எஃப்டிஐ வந்தால் அது ஏழை விவசாயிகளுக்கும் பலனளிக்கும் விலை குறைந்து நுகர்வோருக்கும் பலனளிக்கும் என்று வாதிடுவோர், எதனால் நமது உள்நாட்டு பெருவர்த்தக நிறுவனங்கள் வளர்ந்தபின்பு அவ்வாறு ஏன் நடக்கவில்லை என்று விளக்க வேண்டும். தொடக்கத்தில் உள்நாட்டு மற்றும் அந்நிய ஏகபோக நிறுவனங்கள் கொள்முதலை தங்களது ஒட்டுமொத்த கட்டுப்பாட்டில் கொண்டுவரவேண்டும் என்பதற்காக விவசாயிகளுக்கு சிறிது நல்ல விலை கொடுப்பார்கள். எனவே அவர்கள் தங்களது பொருட்களை பெரிய மூலதனத்திடம் விற்பார்கள், படிப்படியாக அவர்களையே சார்ந்திருக்க தொடங்குவர். உற்பத்தியாளர்களுக்கு தங்களைத் தவிர செல்ல வேறு இடம் இல்லை என்று ஏகபோகங்கள் எப்போது காண்கிறார்களோ அதுமுதல் விவசாய விளை பொருட்களுக்கான விலையையும், அதேபோல் எந்தப் பயிர் உற்பத்தி செய்யவேண்டும், எந்த உரம் அல்லது பூச்சிக் கொல்லி பயன்படுத்த வேண்டும் என்பதையும் ஏகபோகங்களே தீர்மானிக்கின்றனர்.

ஒரு குறிப்பிட்ட பயிருக்கு அல்லது விவசாய மூலப்பொருளுக்கு உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ சந்தை உள்ளது (அதாவது நிர்ணயிக்கப்பட்ட விலையில் ஒருபொருளை நுகர்வோர் வாங்குவதற்கான வாய்ப்பு உள்ளது) என்று பெரிய ஏகபோகங்கள் பார்த்துவிட்டால் உடனடியாக விவசாயிகள் உற்பத்தி செய்யும் அத்தியாவசிய உணவுப் பயிர்களை நிறுத்த சொல்லி அதற்குப் பதிலாக ‘ஒப்பந்த அடிப்படையில்’ சந்தைவாய்ப்புள்ள பயிரை உற்பத்தி செய்யுமாறு நிர்ப்பந்திக்கின்றனர். அப்படி உற்பத்தி செய்த பொருட்களை (ஏகபோகங்களால்) நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்கும்படி விவசாயிகள் நிர்ப்பந்திக்கப்படுவர், அதோடு மேல்தட்டு நுகர்வோர் மத்தியில் சந்தை வாய்ப்புள்ள அல்லது வெளிநாட்டு ஏற்றுமதிக்கு லாபகரமாக உள்ள அந்த பயிர்களை மட்டுமே பயிரிடுமாறு கட்டாயப்படுத்தப்படுவர். நாட்டு மக்களின் தேவைகள் மற்றும் அவசியங்களைப் பற்றியும் ஏன் சுற்றுச்சூழலையும் பற்றிக்கூடக் கவலைப்படாமல் அவர்கள் அதை செய்கின்றனர்.

சிப்ஸ் உற்பத்திக்காக பெப்சிக்கு உருளைக் கிழங்கு வேண்டுமென்றால், அந்தப் பருவத்தில் விளையும் பருப்புகள் மற்றும் இதர பயிர்களை உற்பத்தி செய்யாமல் விவசாயிகள் உருளைக் கிழங்குகளை ஏராளமாகப் பயிரிடுவர். தொடக்கத்தில் அந்த விவசாயிக்கு நன்மை கிடைக்கலாம் அதனால் அவர் ஒப்பந்த விவசாயம் லாபகரமானது என்று எண்ணலாம். ஆனால் மற்ற பொருட்கள் உற்பத்தி குறைந்து பற்றாக்குறை ஏற்பட்டுவிடும். இதனால்தான் பருப்புகள், தானியங்கள் மற்றும் காய்கறிகளின் விலை ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகிறது.

தங்களது கட்டுப்பாடுகளுக்குள் விவசாயிகளைக் கட்டிவைப்பதற்காக பெரிய முதலாளிகள் தங்கள் மூலமாக கடன்களுக்கும் முன்பணத்திற்கு ஏற்பாடு செய்கின்றனர், அதேபோல் விதைகள், உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளையும் வழங்குகின்றனர். எனவே அந்த குறிப்பிட்ட பெரிய சில்லரை வியாபாரிகளிடம் மட்டுமே தங்களது உற்பத்திப் பொருட்களை விவசாயிகள் விற்க முடியும், வேறு யாரிடமும் விற்க முடியாது. எனவே இந்த பகாசுர ஏகபோகக் குழுமங்கள் விவசாயப் பொருட்களின் ஒரே கொள்முதலாளராகவும் விற்பனையாளராகவும் உருவெடுக்கின்றன. சிறிய மூலதனத்தை விழுங்கி போட்டியிலிருந்து வெளியேற்றுவதற்காக பெரிய மூலதனங்கள் காலங்காலமாக வழக்கமாகப் பின்பற்றும் அதே தந்திரத்தின் மூலம் விவசாயிகளையும் சிறிய அளாவிலான உற்பத்தியாளர்களையும் விழுங்கிவிட்டு விவசாயத்தில் பெரிய கார்ப்பொரேட்டுகள் ராஜ்யத்தை உருவாக்குகின்றனர். எனவே மக்களை ஏமாற்றுவதற்காகத்தான் விவசாயம் வளம்பெறும் என்ற உணர்ச்சிகரமான மாயையை எஃப்டிஐ ஆதரவு விசுவாசிகள் பேசுகின்றனர். உண்மை என்னவெனில் பெரிய கடைகளின் வரும் 70%க்கும் மேற்பட்ட வருமானம் விவசாயிகளுக்கு சம்பந்தமே இல்லாத உணவு–சாரா பொருட்களிலிருந்து கிடைக்கின்றன.

நகர்புற நுகர்வோரை ஈர்ப்பதற்காக அவர்களுக்கு ஏராளமான தெரிவு வாய்ப்புகளும் (சாய்ஸ்) மற்றும் குறைந்த விலைக்கும் கிடைக்கும் என்றும் கூறுவது மற்றொரு மோசடியாகும். மாறாக உலகமெங்கிலும் நிலை பின்வருமாறு உள்ளது. தொடக்கத்தில், நுகர்வோருக்கு சிறிய பாரம்பரிய கடைகளால் செய்ய முடியாத மனதை மயக்கும் சலுகைகள், தள்ளுபடிகள் போன்றவை பெரிய பல்பொருள் கடைகளால் வழங்கப்படுகின்றன. இதனால் சிறு வணிகர்கள் சிதைக்கப்படுகின்றனர். பின்னர் ஏராளமான செயல்படாத மூலதனத்தை வைத்துள்ள மிகப்பெரிய தொழிற் குழுமங்கள், சிறிது காலத்திற்கு குறைந்த லாபத்திற்கு சில நேரங்களில் சிறிது காலத்திற்கு சொற்ப நஷ்டத்திற்குக்கூட விற்கின்றனர். மெல்ல மெல்ல தங்களது ஏகபோகத்தை ஸ்தாபித்து, போட்டியாளர்களை, நடுத்தர மற்றும் சிறு கடைகளை துடைத்தெறிகின்றனர். ஏற்கனவே ஏகபோகங்களின் பிடிக்குள் நுகர்வோர் சிக்கிவிடுகின்றனர். பின்னர் பொருட்களின் விலையையும் அன்றாடம் தேவைப்படும் பொருட்களையும் கூட ஏகபோகங்களே சர்வாதிகாரமாக நிர்ணயிக்கின்றனர்.

கட்டுப்பாடற்ற எஃப்டிஐ–ஆல் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சி முதலில் நாட்டின் வளங்கள் சீரழிக்கப்படுவதில் தொடங்கி அதன் விளைவாக விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகளின் வாழ்வாதரங்களை இழப்பதில் போய் முடிகிறது. கிராமப்புற வேலைவாய்ப்பின்மையால் ஏற்கனவே அதிகரித்துவரும் நகர்ப்புறத்திற்கு செல்லும் கிராமப்புற மக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். அங்கே தங்களுக்குரிய பொருள் வழங்கும் வழியும் சில்லரை வர்த்தக சங்கிலியும் அறுந்துபோன நிலையில் ஓட்டுமொத்த சிறிய தொழிற்சாலைகள் மற்றும் தொழில்துறையினர் வலுவான அந்நிய முதலீட்டின் இறக்கத்திற்கு ஏங்கி ஏற்கனவே அழிந்து வந்துகொண்டிருக்கின்றனர். இந்தத் தொழிற்சாலைகளை இதுவரை சார்ந்திருந்த ஏராளமான மக்கள் தெருவில் வீசப்பட்டு வேரற்ற வேலையற்ற கிராமப்புற புலம் பெயர்ந்தவர்களோடு சேர்ந்துவிடுவர். இப்படி வேலையில்லாமல் திரளும் மிகப்பெரிய பட்டாளத்திற்கு வேறு எந்த வழியுமில்லாமல் ஏற்கனவே உள்ள ஈனர்கள் மற்றும் கிரிமினல்களோடு இணைவர். இது நாட்டின் சமூக கட்டமைப்பின் முதுகெலும்பையை நொறுக்கிவிடும்.

இந்த அந்நிய கடைகளில் பணியாற்றும் குறைந்த அளவிலான தொழிலாளர்களுக்கும் கூட இந்த நாட்டு தொழிலாளர்கள் எதிர்பார்க்கும் கடுமையாகப் போராடிப்பெற்ற உரிமைகள், ஜனநாயக அல்லது தொழிற்சங்க உரிமைகள் கிடைக்கப்போவதில்லை. இந்த நிறுவனங்களில் தொழிலாளர்களுக்கான உரிமைகள் குறைக்கப்படும், பணிபுரியும் ஊழியர்கள் கடுமையான பணிச் சூழலில் பணிபுரியுமாறு நிர்ப்பந்திக்கப்படுவர். நிலையற்ற நிரந்தரமற்ற வேலை சூழலுக்குள் தள்ளப்படுவர். வேறு வார்த்தைகளில் கூறினால் ஏற்கனவே பல்வேறு நாடுகளில் நாசத்தைக் கொண்டுவந்துள்ளதைப் போன்ற சிறப்புப்பொருளாதார மண்டலங்களாக இவை உருவாகும். (இதற்கேற்றவாறுதான் 24 மணிநேரமும் ஷாப்பிங் மால்கள் இயங்கலாம், பெண்களும் இரவில் பணிக்கு அமர்த்தப்படலாம் என்ற நடவடிக்கைகளை தற்போதைய மத்திய அரசாங்கம் எடுத்துள்ளது)

தகவல் ஒளிபரப்புத்துறையின் பல்வேறு பிரிவுகளில் எஃப்டிஐ–யை அனுமதிப்பது மற்றொரு பாதகமான மோசமான விளைவை ஏற்படுத்தும்.

தொடர்ச்சி 4ம் பக்கம்

## அந்நிய நேரடி முதலீட்டு சீர்திருத்தம்

# மக்களின் எதிர்ப்பு இயக்கம் இல்லாததால்தான் அந்நிய நேரடி முதலீட்டு சீர்திருத்தங்களை கொண்டுவர முடிந்தது

*3ம் பக்கத் தொடர்ச்சி*

*அது இந்திய தொலைத் தொடர்பு மற்றும் அது தொடர்புடைய தொழிற்சாலைகளுக்கு கடுமையான போட்டியை உருவாக்குவதோடு முடிவடையாது. கேபிள் டிவி, மொபைல் டிவி போன்றவற்றிலும் எஃப்டிஐ வரவுள்ளதால் அது கேவலமான ஏகாதிபத்திய கலாச்சாரம் ஊடுருவதற்கான மடைக்கதவையும் திறந்துவிட்டுவிடும். ஏற்கனவே வக்கிரமான, ஆபாச கேளிக்கை நிகழ்ச்சிகள் குடும்பங்களுக்குள்ளேயே ஊடுருவிவிட்டன, அவை 'அந்நிய மொபைல் டிவி' ஒவ்வொரு கைகளுக்குள்ளும் வந்துவிட்டால் அதன் கோரப்பிடி பரந்து விரிந்துவிடும். சாதகமான சீரழிந்துபோன முதலாளித்துவ கலாச்சார சூழல் சமுதாயத்தில் நிலவிய போது கூடவே ஐடி தொழிற்சாலைகள் பரவியவுடன் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான கொடிய தாக்குதல்கள் அதிகரித்துவிட்டதை நினைவிற்கொண்டு பார்த்தால், இதன் விலை என்ன என்பதை கற்பனை செய்துகொள்ளலாம். இந்தியப் மருந்து தொழில்துறையின் பின்னோக்கிய பொறியியல், திறமையான செயல்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப திறன்கள் ஆகியவற்றிற்கு பெயர்பெற்றவை, பல மூன்றாவது உலக நாடுகளுக்கு கட்டுபடியாகக் கூடிய விலையில் மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்து விற்றுக்கொண்டிருக்கின்றன. அப்படி இருக்கையில் இந்தத் துறையில் அந்நிய ஏகபோகங்கள் அதிகபட்ச லாபத்தை அடைந்து, உள்ளூர் குறிப்பாக சிறிய உற்பத்தியாளர்களை காலி செய்துவிட்டு இந்தத் துறையிலும் தங்களது பிடிக்குள் கொண்டுவருவதைத் தவிர அந்நிய நேரடி முதலீடு வேறு என்ன நன்மையைக் கொண்டு வரப்போகிறது?*

### பாதுகாப்புத் துறையில் எஃப்டிஐ

*உலக முதலாளித்துவப் பொருளாதாரம் கடுமையான மந்த நிலையையும் சந்தை நெருக்கடியையும் சந்திக்கும் இன்றைய காலத்தில் உலகின் அனைத்து முதலாளித்துவ நாடுகளும் தங்களது பொருளாதாரத்தை இராணுவமயமாக்குவதை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகின்றன. இப்படிப்பட்ட சூழலில் பாதுகாப்புத் துறையில் எஃப்டிஐ என்பது இந்தத் திட்டத்தின் பங்கும் பகுதியுமாகவே இருக்கும். சந்தை நெருக்கடியிலுள்ள பொருளாதாரத்தை செயற்கையாக தூண்டுவதற்காக, ஒரு அரசாங்கம் பாதுகாப்புத் தொழிற்சாலைகளில் முதலீடு செய்கிறது, உற்பத்திப் பொருட்களை தானே வாங்குகிறது, இந்த சுழற்சியை வைத்திருப்பதற்காக, போர் வெறியை, போர் உணர்வை, போர் பயத்தை மக்களிடையே உருவாக்குகிறது, இது ஆயுதத்தை உற்பத்தி செய்யும் நாடு விற்பதற்கும் மற்ற நாடு வாங்குவதற்கும் உதவுகிறது. எஃப்டிஐ இந்த செயல்முறைபோக்கை முடுக்குவதற்காக மட்டுமே உதவும்.*

*அடுத்த ஆண்டுவாக்கில் அமெரிக்கா மற்றும் சீனாவுக்கு அடுத்தபடியாக இராணுவத்திற்கு அதிகமாக செலவு செய்யும் மூன்றாவது பெரிய நாடாக இந்தியா உருவாகும். அடுத்த 5 ஆண்டுகளில் தளவாடங்களுக்காக கிட்டத்தட்ட 100 பில்லியன் டாலர்கள் செலவு செய்யப்போவதாக எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச ஆயுத உற்பத்தியாளர்களுக்கு இது மகிழ்ச்சியை உருவாக்குவதால் இந்தியா அதற்கான லாபகரமான நாடாக திகழ்கிறது. மூன்றாண்டுகளுக்கு முன்பு, அமெரிக்க துணை பாதுகாப்பு செயலாளர் அஸ்டோன் கார்ட்டர், இந்தியா எஃப்டிஐ உச்சரவம்பை உயர்த்தினால், அது உலகளாவிய நிறுவனங்கள் முதலீடு செய்வதற்கு வர்த்தகரீதியான ஊக்கமளிக்கும் என்று கூறியிருந்தார். இந்திய ஏகபோகங்கள் தங்களுடைய பங்கிற்கு அந்நிய மூலதனத்தோடு சேர்ந்து நவீன ஆயுதங்கள் உற்பத்தி செய்யவும் அதை ஒப்பீட்டளவில் பலவீனமாக உள்ள நாடுகளுக்கு விற்கவும் முயற்சிக்கின்றனர்.*

*போர்வெறிபிடித்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் மற்ற ஏகாதிபத்திய வல்லரசுகளும் அவர்களது பகாசுர போர் வியாபார பன்னாட்டு நிறுவனங்களும் நாட்டின் பாதுகாப்புத் துறைக்குள் நுழைந்துவிட்டால், அது நமது நாட்டின் பாதுகாப்பிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதே இந்திய மக்களின் கவலையாகும். அது அனைத்து இராணுவ ரகசியங்கள், இராணுவ ஆயுதங்கள் மற்றும் நாட்டின் இதர முக்கியமான தகவல்களையும் அவர்களின் பார்வைக்கு வைப்பதன் மூலம் ஒட்டுமொத்த பாதுகாப்புத் துறையையும் அவர்களுக்குத் திறந்துவிட்டுவிடும். வெளிநாட்டினர் விலைக்குவாங்கிய உள்நாட்டு நிறுவனங்கள் இந்திய மக்களுக்கு எதிராக, தேவைப்பட்டால் இந்திய அரசாங்கத்திற்கும் எதிராக கண்காணிக்க, ஊடுருவ மற்றும் அழிக்கும் வேலையிலும் பயன்படுத்தப்படும். எஃப்டிஐ நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டுவரும் என்று 'சீர்திருத்த' வியாபாரிகள் கூறுகின்றனர், ஆனால் அதை எஃப்டிஐ இல்லாமலேயே கொண்டு வரலாம். நவீன ஆயுதங்களை வாங்க வேண்டும் என்பதற்காக மட்டுமே தேசியப் பாதுகாப்பை சமரசம் செய்துகொள்வதில் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டும்?*

*கூடவே பாதுகாப்புத் துறையில் எஃப்டிஐ–யை அதிகரிப்பதால் அது ஆயுதங்கள் கொள்முதலில் மேலும் கணக்கு வழக்கற்ற ஊழல், லஞ்சம் மற்றும் முறைகேடுகளுக்கும் வழிவகுக்கும். ஏற்கனவே எஃப்டிஐ வராமலேயே பாதுகாவலர்களாகவும் ஆள்பவர்களாகவும் இருக்க வேண்டிய இராணுவ உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் அதிகார வர்க்கத்தினர் பல்வேறு ஊழல்களில் ஈடுபட்டதை நாடு ஏற்கனவே கண்டுள்ளது.*

*எஃப்டிஐ வந்தால் மற்ற தொழில்துறைகளைப் போலவே பாதுகாப்புத் துறையிலும் இருக்கின்ற வேலைவாய்ப்பை மெலும் சுருக்கிவிடும். அவை எல்லாம் மிகவும் மூலதனம் அதிகமான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய அதேவேளையும் குறைந்த அளவு மனித சக்தியைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகளாகவே இருக்கும்.*

*சிறிய ரக ஆயுதங்கள் உற்பத்தியில் எஃப்டிஐ–யை அனுமதிப்பதால் அது சந்தையில் ஏராளமான ஆயுதங்கள் கிடைப்பதற்கு வழிவகுக்கும், இது ஏற்கனவே உள்ள கிரிமினல்கள் தங்களது நடவடிக்கைகளை நவீன வெளிநாட்டு ஆயுதங்களைக் கொண்டு ஈடுபடுவதற்கு வழிவகுக்கும்.*

### எஃப்டிஐ சீர்திருத்தங்களை செய்ய ஏகபோகங்களுக்கு உள்ள நிர்ப்பந்தம்

*பின் எதற்காக இந்திய ஏகபோகங்கள் எஃப்டிஐ–யை வரவேற்கின்றனர். நன்கு ஸ்திரம் பெற்றுவிட்ட நிலையில் இந்திய ஏகபோக முதலாளிகள் நிதி சர்வாதிகாரிகளாக வளர்ந்துவிட்டனர், அவர்களது நிதி மூலதனத்தை ஆசியா–ஆப்பிரிக்கா–தென் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிலுமுள்ள பலவீனமான அல்லது சிறிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அங்குள்ள உழைப்பு சக்தியை சுரண்டிவருகின்றனர். ஆனாலும் கூட கடுமையான தேக்கநிலை மற்றும் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள உலக முதலாளித்துவ–ஏகாதிபத்திய அமைப்பில் இந்திய ஏகபோகங்கள் கடுமையான போட்டியை சந்திக்கின்றனர். எனவே அவர்கள் இருமுனை நடவடிக்கை எடுக்க முடிவெடுத்துள்ளனர்.*

*உலக சந்தையில் பெரும் பங்கைப் பெற விரும்புகின்றனர், அதற்கான பலத்தினை பெற்றிடவும் விரும்புகின்றனர். எனவே தெற்கு மற்றும் தென் கிழக்கு ஆசியாவின் இந்த பகுதிகளிலாவது தங்களது வல்லாதிக்கத்தை ஏற்படுத்தி வல்லரசாக உருவெடுக்க விரும்புகின்றனர். தங்களது இராணுவ பலத்தை அதிகரிப்பது, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளோடு உருவாக்கிய அணுசக்தி ஒப்பந்தம் போன்ற இராணுவ ஒப்பந்தங்களை மேற்கொள்வது போன்றவற்றிலிருந்து இது ஏற்கனவே வெளிப்பட்டு வருகிறது. இந்திய ஆட்சியாளர்களின் இந்த வல்லாதிக்க பெரிய–அண்ணன் அணுகுமுறையின் தாக்கத்தை அண்டைய நாடுகளால் உணரப்படுகின்றது.*

*மறுபுறம், உலக சந்தையில் பெரிய பங்கு பெறுவதற்காக, தங்களது சொந்த சந்தையை ஏகாதிபத்திய அதிகாரங்களுக்கு குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு திறந்துவிட்டு அதன்மூலம் அவர்களிடமிருந்து சில சலுகைகளையும் ஆதாயங்களையும் பெற்று மற்ற நாடுகளில் தங்களது நிதி மூலதனத்தை முதலீடு செய்து ஆயுதங்கள் உள்ளிட்ட தங்களது பொருட்களை அங்கே விற்க முயற்சிக்கின்றனர்.*

*இந்த அரசியல் கட்டாயம்தான் இந்திய ஏகபோகங்களை, தங்களது நாசகார நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களோடு சேர்த்தும் கூடவே ஏகாதிபத்தியங்களோடு, குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு பொருளாதார ஒத்துழைப்பு, அணுசக்தி உடன்பாடுகள் அல்லது ஏராளமான சலுகைகளையும் உடன்பாடுகளையும், நேரடியாகவோ மறைமுகமாகவோ வழங்கியாவது நெருக்கத்தை ஏற்படுத்திட இட்டுச் சென்றுள்ளது. இந்த நெருக்குதல்தான் அரசாங்கத்தை நாட்டின் பாதுகாப்புத்துறை உள்ளிட்ட பொருளாதாரத்தை எஃப்டிஐ வழியாக அமெரிக்காவிற்கு திறந்துவிட வைத்துள்ளது. மோடி தலைமையிலான பாஜக அரசாங்கம் அவர்களின் எஜமானர்களின் ஆசைகள் மற்றும் விருப்பங்களுக்கு வடிவம் கொடுத்து வருகின்றனர்.*

*இவை எல்லாமே மாபெரும் தலைவர் லெனின் அவர்களின் மதிப்புமிக்க போதனைகளை சுட்டிக் காட்டுகின்றன. தேசியவாதத்தைப் பற்றி பெருமை கொள்கையில் முதலாளித்துவம் தேசிய குணாம்சத்தை கொண்டிருந்தது. ஆனால் ஏகாதிபத்திய காலகட்டத்தில், அதாவது நிதி மூலதன காலகட்டத்தில், அது உலகளாவிய வடிவம் பெறுகிறது, அந்நிய சந்தையை கைப்பற்றுவதற்காக நிதிமூலதனத்தை உக்கிரமாக பயன்படுத்தும்போது தேசிய நலன் என்பது சாதுர்யமாக கண்டுகொள்ளாமல் விடப்படுகிறது என்று அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.*

### ஆட்சியாளர்களுக்கு இந்த சீர்திருத்தங்களில் ஈடுபடுவதற்கான தைரியம் உருவானதற்கு ஜனநாயக இயக்கங்கள் இல்லாததே காரணமாகும்

*எழக்கூடிய கேள்வி என்னவென்றால்: நீண்ட காலத்திற்கு முன்பு காங்கிரஸ் தொடங்கி ஆனால் மக்களின் கடுமையான எதிர்ப்பால் கொண்டுவர முடியாமல் இருந்ததை தற்போது இந்த அளவு தீவிரமாக மோடி அரசாங்கம் கொண்டுவர முடிந்தது?*

*எஃப்டிஐ–க்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்தவேண்டிய அவசர தேவை மக்கள் ஆதரவு ஜனநாயக சக்திகளுக்கு இருக்கிறது. அதிலும் இந்த எஃப்டிஐ சீர்திருத்தங்களின் பின்னணியிலுள்ள நயவஞ்சக நோக்கத்தை அம்பலப்படுத்தி, அதுகுறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டி, அந்நிய மூலதனம் ஊடுருவதைத் தடுப்பதற்காக பாரம்பரியமிக்க ஏகாதிபத்திய–எதிர்ப்பு போராட்டங்களை புத்துயிர்ப்பூட்ட வேண்டிய பிரதான கடமை மார்க்சிசம் பேசுபவர்களுக்கு இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக உக்கிரமான சித்தாந்த–அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முயற்சிப்பதற்கு மாறாக மார்க்சிஸ்டுகள் என்ற போர்வையில் இருக்கும் சிபிஐ(எம்) வெறும் வாய் வார்த்தைகளோடு நிறுத்திக்கொள்வதுபோல் தெரிகிறது.*

*மாறாக காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியின்போதும் அவர்கள் இதேபோலத்தான் நடந்துகொண்டனர். மேற்கு வங்கத்தில் ஆட்சியில் இருந்த போதும்கூட வளர்ச்சியைக் கொண்டுவருகிறோம் என்ற பெயரில் அந்நிய மூலதனத்தை ஈர்ப்பதற்கும் அழைப்பதற்கும் கூட சிபிஐ(எம்) தவறவில்லை. அது காங்கிரஸ் அல்லது தற்போது பாஜக போன்ற சக்திகளை ஊக்குவிக்கவே உதவும் என்பதை அவர்கள் கிரகிக்கத் தவறிவிட்டனர். தற்போது மோடி தலைமையிலான அரசாங்கம், கிட்டத்தட்ட எதிர்க்கட்சியே இல்லாத நிலையில், தங்களது உடன்பாடுகளை வேகமாகவும், மூர்க்கத்தனமாகவும், தீர்மானகரமாகவும் நிறைவேற்ற முயற்சிக்கிறது.*

*எனவே அந்நிய முதலீட்டோடு கூட்டு சேர்ந்து இந்திய உழைக்கும் மக்களை ஈவிரக்கமின்றி சுரண்டுவதை உக்கிரப்படுத்துவதகாக இந்திய ஏகபோங்களின் திட்டமான இந்த ஒட்டுமொத்த எஃப்டிஐ முயற்சிகளை அம்பலப்படுத்தும் சித்தாந்த பிரச்சாரங்களைக் கட்டியெழுப்பி, அதுகுறித்து மக்களை விழிப்புணர்வு பெறச்செய்து, அந்த புரிந்துணர்தலின் அடிப்படையில் அவர்களை பலப்படுத்தி ஒன்றுதிரட்டி சக்திவாய்ந்த ஜனநாயக இயக்கங்களைக் கட்டியெழுப்புவதே இத்தருணத்தின் தலையாய தேவையாகும்.*

*அத்தகைய போராட்டம் மட்டுமே தனது முடிவை மாற்றும்படி அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும். இந்தியாவின் புரட்சிகரக் கட்சியாக எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) ஓய்வொழிவில்லா வர்க்க மற்றும் வெகுஜன போராட்டங்களை வளர்த்தெடுக்கும் முயற்சிகளின் ஒருபகுதியாக இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த இயக்கத்தில் கைகோர்க்க முன்வருமாறு ஜனநாயக எண்ணம் கொண்ட மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறது.*

## சீனப்பொருளாதாரத்தின் வீழ்ச்சி

# ஒரு பொருளாதாரத்தின் குணாம்சம் அதன் செயற்பாட்டை ஆட்டுவிக்கும் அடிப்படை விதிகளாலேயே தீர்மானிக்கப்படவேண்டும்

1ம் பக்கத் தொடர்ச்சி

யின்மை விகிதமானது 2002–09 ஆண்டுக்காலத்தில் சராசரியாக 10.9 சதவிகிதமாக அதிகரித்துவிட்டது. தொடர்ந்து தற்போதுவரை இது அதிகரித்துக் கொண்டேதான் இருக்கிறது. சீனாவின் வட கிழக்கு பிராந்தியத்தில் அரசுத்துறை நிறுவனங்கள் அடுத் தடுத்து மூடப்பட்டதால் அப்பிராந்தியத்தில் 2002–09 காலத்தில் வேலையின்மை விகிதமானது 12.5 சதவி கிதம் என்ற அளவிற்கு உயர்ந்து அப்பிராந்தியத்தை கடுமையாக சிதைத்துள்ளது. 2008–09 ஆண்டுகளில் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார சுணக்கத்தின் போது 2 கோடி தொழிலாளர்கள் வேலையிழந்தனர். இவ்வேலையிழப்பு பிரதானமாக உற்பத்தித் துறையில், மிக அதிகப்படியாக நாட்டின் கடலோர பகுதிகளிலேயே நிகழ்ந்தது.

பங்குச்சந்தையின் ஏற்றஇறக்கங்கள் பொருளாதார நிலைமைகளின் குறியீடுகளாக முதலாளித்துவ பொருளாதார பண்டிதர்களால் கருதப்படுகிறது. இந்த அம்சத்திலும், அதாவது சீனாவின் பங்குச்சந்தையிலும் வீழ்ச்சியே ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதற்கொண்டு பங்குகள் மிகக் கடுமையாக வீழ்ந்து அவை தொட்ட அதிகபட்ச அளவிலிருந்து 50 சதவிகிதத்திற்கு வீழ்ந்தன. உதாரணத்திற்கு, சீன பங்குச் சந்தையின் 30% வீழ்ச்சியால் ஏற்படும் நஷ்டம் 2013ம் ஆண்டு யுகேயின் ஒட்டுமொத்த பொருளாதார உற்பத்திக்கு சற்றேறக்குறைய சமமாகும். 2007க்கும் 2014க்கும் இடைப்பட்ட 7 ஆண்டுக்காலத்தில் சீனாவின் மொத்த கடன் நான்கு மடங்கு அதிகரித்தது. இதே காலத்தில் கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையிலான விகிதாசாரம் ஏறக்குறைய இருமடங் காயிற்று. சீனாவின் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக்காட்டிலும் 282% அதிகமாக உள்ளது. யுஎஸ்ஸின் கடனைக்காட்டிலும் இது மிக அதிக மாகும். கார்ப்பொரேட் கடனானது ஜிடிபியைக் காட்டிலும் 125% அதிகரித்தது. நிறுவப்பட்ட உற்பத்தித் திறனில் பெரும்பாலான திறன்கள் வெட்டியாகக்கிடக்கின்றன. உள்நாட்டு சந்தை, ஏற்றுமதி சந்தை ஆகிய இரண்டிலும் சந்தைச் சுணக்கம் காணப்படுவதையே இது குறிக்கிறது. அதிகரிக்கும் கடன் சுமை, பேரதிக அளவிலான வீட்டு வசதி மற்றும் தொழிற்சாலை உற்பத்தித்திறன், வீழ்ந்து வரும் பங்குச்சந்தை என்ற சூழ்நிலையில் பொருளாதார வளர்ச்சிக்கு புத்துயிர் கொடுப்பதற் கென பாரம்பரியமாக அரசாங்கம் பயன்படுத்திவந்த யுக்திகளான மேற்கட்டுமானத்திற்காக செலவிடல், சுலபத்தவணைக் கடன், ஏற்றுமதியை ஊக்குவித்தல் போன்ற யுக்திகள் மேன்மேலும் உபயோகமற்றவை யாகவே ஆகிவிடுகின்றன. சீனப்பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க அளவில் ஏற்பட்டுள்ள இத்தொய்வும் சரிவும் ஒட்டுமொத்த முதலாளித்துவ–ஏகாதிபத்திய உலகில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

### சோசலிச பொருளாதாரமே சீனாவின் வியக்கத்தகு வளர்ச்சிக்கு காரணம்

புரட்சிக்கு முந்தைய சீனம் அரைக்காலனிய அரை நிலப்பிரபுத்துவ நாடாகும். மையப்படுத்தப்பட்ட பொருளாதாரம், தொழில்மயம், மையப்படுத்தப் பட்ட நிர்வாகம் ஆகியன அப்போது அங்கில்லை. 54 கோடி மக்கள் தொகையுடன் போரால் சின்னா பின்னமாக்கப்பட்ட மிகக்கடுமையான ஏழ்மையுடைய நாடாக அது விளங்கியது. அரை வயிற்றுக்கு மட்டுமே உணவுண்ட விவசாயக்கூலிகளே பெரும்பான்மை மக்களாக இருந்தனர்.

இவ்விவசாயக்கூலிகளை நிலச்சுவான்தார்களும் போர்ப்படை உரிமையாளர்ளும் அடிமைகளாகவே நடத்தினர். சகாப்தம் படைத்த புரட்சியின் மூலம் 1949ல் பிரபுத்துவ நிலச்சுவான்தார்களிடமிருந்தும் காலனிய மேலாதிக்கத்திலிருந்தும் அந்நாட்டிற்கு விடுதலை பெற்றுத்தந்தது மாமனிதர் மாசேதுங் மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்று சிறப்பு மிக்க தலைமையேயாகும். அன்றைய சீனத்தின் பருண்மையான சூழ்நிலையில் மார்க்சிசம்–லெனினிச அறிவியலை மிகச்சரியாக பிரயோகித் ததின் மூலம் முழு அளவிலான முதலாளித்துவம் என்ற நிலையை வெற்றிகரமாகத் தாவித்தவிர்த்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் சோசலிசத்தை நிறுவினார். முதலாளித்துவத்தில் காணப்படும் தனியார் லாப மற்றும் தனியார் தேவை களினடிப்படையிலான உற்பத்தி முறைக்கு பதிலாக சமூகத்தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய மையப் படுத்தப்பட்ட திட்டமிட்ட பொருளுற்பத்தி முறை பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழ் புதிய பொருளாதார அமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆயினும், முழு அளவிலான சோசலிச பொருளாதார முறையிலிருந்து இம்முறை சற்று மாறுபட்டதாகும். ஏனெனில், பல்வேறு துறைகளில், குறிப்பாக விவ சாயம், சிறு வர்த்தக நிறுவனங்கள், சிறு தொழிற் சாலைகள், தனியார் உடைமை முறை ஆகியன கட்டுக்குள் வைத்து தொடர்ந்து இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டன. அதே சமயம், அடிப்படை தொழில்கள், தகவல் தொடர்பு முறை, வணிக முறை ஆகியன அரசால் நடத்தப்பட்டன. சீனத்தில் புரட்சிக்குப்பிந்தைய உடனடி காலங்களில் காணப்பட்ட பருண்மையான சூழ்நிலையில் சோசலிச மாற்றத்திற்குச் செல்லும் ஆரம்பக்கட்டத்தில் இது அவசியமாக இருந்தது. ஆயினும், புதிய ஜனநாயக சோசலிச முறையின் இந்த இடைப்பட்ட கட்டத்தில் தனியார் உடைமையின் கீழ் செய்யப்பட்ட பொருளுற் பத்திகூட அரசின் மையப்படுத்தப்பட்ட பொருளா தார திட்டமிடலால் கட்டுப்பாட்டில் இருந்தது. இந்த அரசானது சமூகத் தேவைகளை பூர்த்தி செய்வதற் கான பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் நடத்தப்பட்ட ஓர் அரசாகும்.

1950களின் மத்தியில் வேளாண்மை, ஜவுளித் தொழில், நடுத்தரத் தொழில்கள் (மீடியம் இன்டஸ்ட்ரீஸ்) ஆகியவற்றில் தனியார் உடைமை ஒழிக்கப்பட்டு புதிய ஜனநாயக பொருளாதார அமைப்பிலிருந்து சோசலிசப் பொருளாதாரத்திற் கான மாற்றம் பிரதானத்தில் முற்றுப்பெற்றது. மாமனிதர் மாசேதுங் அவர்களின் தொலைநோக்கு கொண்ட கொள்கை மற்றும் அவரது திறம்பட்ட மேற்பார்வையே வெற்றிகரமான இம்மாற்றத்திற்கு காரணமாகும். இவ்வாறாக, சீனம் சோசலிச கட்டத்தை அடைந்தது. அதைத் தொடர்ந்து இந்த சோசலிசத்தை பலப்படுத்தி அதன் பலன்களை உறுதிப்படுத்து வதற்கான போராட்டம் துவங்கிற்று. சோசலிச மறுகட்டுமானத்தின் இந்தக் கட்டத்தில் மார்க்சிச அறிவியலை மிகச்சரியாக பின்பற்றியதன் காரணமாக மிகப்பிரகாசமான வளர்ச்சி ஏற்பட்டது. ஆனால், சோசலிசப்பொருளாதார விதிகளை பிரயோகப் படுத்துவதன் மூலம் சோசலிசத்தை முன்னெடுத்துச் சென்று கம்யூனிசத்தை அடைவதற்கான பாதையை படிப்படியாக அமைப்பதற்கு சில பணிகள் இன்றி யமையாதனவாகும். இது மார்க்ஸ்–எங்கெல்ஸ்–லெனின்–ஸ்டாலின் ஆகியோரின் போதனைகளை பின்பற்றி மாவோவால் உபதேசிக்கப்பட்ட இன்றி யமையாப்பணியாகிய மார்க்சிசம்–லெனினிசத்தை சரியாக உட்கிரகித்து அரசியலை கட்டளையிடும் ஸ்தானத்தில் வைத்து, வாழ்வின் அனைத்து அம்சங் களையும் தழுவிய முறைப்படியான சோசலிசப் போராட் டத்தின் மூலம் கட்சித் தலைவர்கள் தொண்டர்களின் தரத்தை உயர்த்தி, மனம், சிந்தனை, கலாச்சார அம்சங்களில் வர்க்கப் போராட்டத்தை உக்கிரப் படுத்தி, முதலாளித்துவ சிந்தனைகளின் சுவடுகள் அனைத்தையும் முற்றிலும் முறியடிப்பதும் இவ் வாறாக சோசலிசத்தை ஸ்திரப்படுத்துவதுமே ஆகும்.

ஆனால், மிகவும் விரும்பப்பட்ட மேற்கூறிய செயற்போக்கு சீனக்கம்யூனிஸ்ட் கட்சிக்குள் எழுந்த கடுமையான சித்தாந்த வேறுபாடுகளால் முடங்கிப் போயிற்று. பல்வேறு சித்தாந்தம், கலாச்சாரம், அரசியல் பிரச்சினைகளிலும் சோசலிச உற்பத்தி மற்றும் சோசலிச பொருளாதாரத்தை வழிநடத்து தல் ஆகிய மிக முக்கிய பிரச்சினைகளிலும் இத்தகு வேறுபாடுகள் சீனக்கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைக் குள் எழுந்தன. "பொருளாதாரத்தைவிட அரசியலே பிரதானம்" என்ற லெனின் அவர்களது போதனை யின் முக்கியத்துவத்தை மிகச்சரியாக கிரகித்த மாசேதுங், சோசலிச வாழ்வில் சீனக்கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் பெருவாரி வெகுஜனங்களின் அரசியல் விழிப்புணர்வும் கலாச்சாரத் தரமும் அன்றாடம் உயர்த்தப்பட்டாலொழிய சோசலிசப் பொருளாதாரத்தின் அடித்தளம் ஆபத்திற்குள்ளாகி விடும் என்பதை நன்கு உணர்ந்தார். எனவே, மார்க்சிசம்–லெனினிசத்தின் சாராம்சத்தை உயர்த்திப் பிடிப்பதற்கும், முதலாளித்துவ சிந்தனைகள், மனப் போக்குகள் அனைத்தையும் எதிர்த்துப்போராடு வதற்கும், திருத்தல்வாதம் அதிகாரத்தை கைப்பற்று வதை தடுத்து நிறுத்துவதற்கும், கட்சியில் காணப் படும் குறைகளை களைவதற்கும், அதன் தரத்தை உயர்த்தி சோசலிசத்தை பாதுகாப்பதற்காகவும் வரலாற்றுச் சிறப்புமிக்க கலாச்சாரப் புரட்சியை துவக்கி நடைபோட வைத்தார். ஆனால், 1976ல் அவரது மரணத்திற்குப் பிறகு, திருத்தல்வாத–சீர்திருத்த–முதலாளித்துவ பாதையாளரான டெங் சியோபிங் தலைமை அதிகாரத்தைக் கைப்பற்றியது மிகவும் வேதனைக்குரிய விஷயமாகும். இதையடுத்து சீனம் பின்னோக்கிவரத் துவங்கிற்று.

### திருத்தல்வாத டெங் தலைமை அதிகாரத்தை கைப்பற்றிய பிறகு பின்னடைவுப்போக்கு துவங்கிற்று

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தை உக்கிரப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மறுத்த டெங் தலைமை, வர்க்க கூட்டுற வாடல் என்ற மிகவும் வெறுக்கப்பட்ட கருத்தாக் கத்தை மிக சூழ்ச்சிகரமாக பரவவிட்டு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முக்கியத்துவத்தை மறு தலித்து, தாராளவாதம் என்ற போர்வையில் பொருளாதாரத்தைப் பற்றிய அணுகுமுறையில் மிகத்தெளிவான முதலாளித்துவ அணுகுமுறையை ஆதரித்தது. உற்பத்தியில் சோசலிச உறவுமுறையை பின்பற்றிய அரசின் மேற்பார்வையின் கீழ் மையப் படுத்தப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட நன்கு திட்ட மிட்ட பொருளாதாரத்தை மாற்றி அதற்குப்பதிலாக தனியுடைமை மற்றும் தனியார் மூலதனம் ஆகிய வற்றுக்கு நாட்டின் பொருளாதாரத்தை திறந்து விட்டது. அது முதற்கொண்டு, மிகவும் போற்றப்பட்ட சோசலிசத்தை கைவிட்டுவிட்டு முதலாளித்துவ பாதையில் சீனம் பயணிக்கத்துவங்கியது. புரட்சியின் சாதனைகள் அனைத்தும் படிப்படியாக பின்னோக்கித் தள்ளப்பட்டு சீனப்பொருளாதாரத்தில் முதலாளித் துவம் தீர்மானகரமாக ஊடுருவி இறுதியில், எதிர்ப்புரட்சி மூலமாக ஆக்கிரமிப்பு செய்தது.

1980களில் சீனாவின் அதிவேக வளர்ச்சி மற்றும் தொழில் துறை மாற்றமானது நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கும் பொருட்கள் மற்றும் சேவைகளின் சரிசம பகிர்விற்கும் பொருளாதார முடிவெடுத்தலில் ஒரு புதிய வகை ஜனநாயக பங்கேற்றலுக்கும் "சந்தை சோசலிசம்" ஒரு கவர்ச்சிகரமான வாகனம் என பலரும் பார்ப்பதாக பலர் எண்ணினர். மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல், அதிவேக தொழில் மயம், வேளாண் உற்பத்திய வளர்ச்சி, உற்பத்தித் திறனின் வேகமான வளர்ச்சி, பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான இடைவெளியை படிப்படியாக குறைத்தல் ஆகிய அளவீடுகளைக் கொண்டு அளந்தால் புரட்சிக்குப்பிந்தைய மூன்று பத்தாண்டு காலத்தில் சோசலிசப் பாதையைக் கடைபிடித்த சீனம் வியக்கத்தகு வளர்ச்சி கண்டி ருந்தது என்பதை அவ்வாறு கருதுபவர்கள் மறந்து விடுகின்றனர். புரட்சிக்குப்பிந்தைய இருபது ஆண்டு களுக்குள்ளாக சோவியத் பொருளாதாரமானது வெறும் உற்பத்தி வளர்ச்சி என்ற அளவில் மட்டு மின்றி அனைத்து மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வு, வீழும் விலைவாசி, வேலையின்மை பிரச்சினை ஒழிப்பு, அதிவேக தொழில்மயம், கிராமப்புற பொருளாதாரத்திற்கும் நகர்ப்புற பொருளாதாரத் திற்குமான இடைவெளி குறைப்பு, எல்லாவற்றிற் கும் மேலாக மனிதனை மனிதன் சுரண்டுதல் அறவே ஒழிக்கப்பட்டது ஆகியன கண்டு ஓவ்வொருவரும் பிரமித்து நின்றது போலவே, பின்தங்கிய, அபின் போதைக்கு அடிமையாகி சோம்பிக்கிடந்த சீனா மிகக்குறைந்தபட்ச காலத்தில் சக்திவாய்ந்த சோசலிசப் பொருளாதாரமாக உருமாற்றம் பெற்றதைக்கண்டு பலரும் வியந்துபோயினர்.

1978ல் திருத்தல்வாத டெங் தலைமை சோசலி சத்தை அகற்றி முதலாளித்துவத்தை மீண்டும் நிலைநாட்டத் துவங்கியபோது சீனாவில் அரசால் கட்டுக்குள் வைக்கப்பட்டிருந்த வலுவான சோசலிசப் பொருளாதாரம் இருந்தது. ஆகவே, முதலாளித்துவ பாதையாளரான டெங் சியோபிங் மற்றும் அவரது அரசியல் வாரிசுகள் அமல்படுத்திய "சோசலிச சந்தைப் பொருளாதாரம்" அல்லது "சந்தை சோசலிச"த்தின் வெற்றியே சீனப்பொருளா தாரத்தின் "வியக்கத்தகு வளர்ச்சி"க்கு சான்று என்ற கருத்தில் கிஞ்சித்தும் உண்மையில்லை. சொல்லப்போனால், முதலாளித்துவத்தை நோக்கி எந்த அளவிற்கு சீனப்பொருளாதாரம் தள்ளப் பட்டதோ அந்த அளவிற்கு சுணக்கமும் நெருக் கடியும் சீனத்தை பீடிக்கத்துவங்கின. அதிகரித்துவரும் பொருளாதார சுணக்கம் மற்றும் கழிவுகள் ஆகிய பிரச்சினைகளுக்கான காரணம் அதிகப்படியான மையப்படுத்தப்பட்ட சோசலிச அமைப்பு முறை

தொடர்ச்சி 6ம் பக்கம்

## சீனப்பொருளாதாரத்தின் வீழ்ச்சி

# 2004லிலேயே சீனாவில் எதிர்ப்புரட்சி முழுமையடைந்துவிட்டது

5ம் பக்கத் தொடர்ச்சி

யிலான திட்டமிடல் மற்றும் உற்பத்தியேயென டெங்கும் அவரது வாரிசுகளும் நேர்மையற்ற முறையில் கள்ளத்தனமாக வாதிட்டனர். எனவே, நாட்டின் பொருளாதாரம் திறந்துவிடப்பட்டு உலகளாவிய முதலாளித்துவ பொருளாதாரத்தோடு ஒருங்கிணைக்கவேண்டும் என்றனர் அவர்கள். அவ்வண்ணமே, சோசலிச பொருளாதார விதிகளை கைவிட்டுவிட்டு, விஸ்தரிக்கப்பட்ட சந்தைமயம், தனியார்மயம், சீனச் சந்தையில் அந்நிய மூலதனத்தின் மேலாதிக்கத்தை பெரும் அளவில் அனுமதித்தல், அதிகப்படியான கடன்கள் மூலம் சந்தை தேவையை (டிமான்டை) செயற்கையாக உருவாக்குதல், பங்குச் சந்தையில் ஊகவாணிப செயற்பாடுகளை முடுக்கி விடுதல் ஆகியவற்றுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

அரசுத்துறைகளின் மேலாதிக்கம் முடக்கப்படுவதும் அரசுடைமை நிறுவனங்களின் தனியார்மயத்தை ஊக்குவிப்பதும் திட்டமிட்டவகையில் முறையாக நடந்தேறியது. இந்த செயற்போக்கில், சீன தேசிய பொருளாதாரத்தில் பாதியளவை தனியார் துறை ஆக்கிரமித்திருப்பது விரைவில் கண்கூடாக தெரிந்தது. பொருளாதாரத்தில் முதலாளித்துவம் இவ்வாறு விரைவாக ஊடுருவியது, முதலாளித்துவ பாதையாளர்களின் அரசியல் அணுகுமுறை ஆகியன உழைப்புச்சுரண்டல் அதிகரிப்பதை சுண்டிவிட்டதோடு பிற்போக்கு முதலாளித்துவ சிந்தனைகளால் மக்களின் மனங்களை மாசுப்படுத்தும் போக்கிற்கும் வழிவகுத்தது. இத்துடன், சீனக்கம்யூனிஸ்ட் கட்சி முதலாளித்துவக் கட்சியாக சீரழியும் போக்கு வேகம் பிடித்தது. மக்களின் அரசியல் விழிப்புணர்வுமட்டம் தாழ்ந்ததால், முதலாளித்துவ பாதையாளர்களின் ஏமாற்றும் கயமையும் வஞ்சகமும் மக்கள் பார்வையிலிருந்து மறைந்திருந்தது. அந்திம காலத்திய அழுகிய முதலாளித்துவத்தை குறிப்பனவாகிய பிணி, பித்துகள், மனஇறுக்கம், கையறுநிலை, பாகுபாடுகள், கலாச்சாரசீரழிவு, விழுமியங்கள் செல்லரித்துப் போதல் ஆகியன சீனச் சமுதாயத்தில் தென்படத் துவங்கின.

### சீன எதிர்ப்புரட்சி 13 ஆண்டுகளுக்கு முன்பே முற்றுப்பெற்றுவிட்டது

இந்த செயற்போக்கில் சீனத்தில் எதிர்ப்புரட்சி முடிவுக்கு வந்தது. சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் 16வது காங்கிரசைத் தொடர்ந்து 2003ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11 முதல் 14ம் தேதிவரை நடைபெற்ற கட்சியின் 16வது மத்தியக்கமிட்டியின் 3வது ப்ளீனம் கூட்டத்தொடர் செய்த பரிந்துரைகளின் படி சீன மக்களின் பத்தாவது தேசிய காங்கிரஸ் 14.3.2004 அன்று மேற்கொண்ட அரசியல் சட்டத்திருத்தங்கள் வாயிலாக எதிர்ப்புரட்சி முற்றுப்பெற்றது. அதேபோல், சீனக்கம்யூனிஸ்ட் கட்சியும் தொடர்ந்து திருத்தல்வாதப்பாதையில் சீரழிந்து சென்றதன் போக்கில் புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சியாக இல்லாமற்போனது. அரசும்கூட சோசலிச அரசாக இல்லாமல் முதலாளித்துவ அரசாக மாறிற்று. முதலாளித்துவப் பாதையைப் பின்பற்றிய சீனக்கம்யூனிஸ்ட் கட்சித்தலைமை பொது அல்லாத பொருளாதார (அதாவது தனியாருக்கு சொந்தமான முதலாளித்துவப் பொருளாதார) வளர்ச்சியை அரசு ஊக்குவித்து, ஆதரித்து, வழிகாட்டி பாதுகாக்கும் என்று கூறியது. ஏனெனில் சமூக மேம்பாட்டில் தனியார் துறையின் முக்கியத்துவத்தை அரசு படிப்படியாக உணர்ந்துவிட்டது என்றும் அக்கட்சித் தலைமை கூறியது. இவ்வாறாக, ஆரம்பத்தில் "பொதுப் பொருளாதாரத்தின் துணைவ"னாக இருந்த தனியார் துறையானது பின்னர், "சோசலிசப் பொருளாதாரத்தின் இன்றியமையான அங்கமா"கி, இறுதியாக மேலாதிக்கம் செலுத்தும் பங்காளராக மாறிவிட்டது.

இதன் விளைவுகள் கண்கூடாகத் தெரிந்தன. அபாயகரமான அளவிற்கு வறுமை அதிகரித்துள்ளது. 15 கோடிக்கும் அதிகமான மக்கள் நாளொன்றுக்கு ஒரு டாலருக்கும் குறைவான பணத்திலேயே காலங்கழிக்கின்றனர். வறுமை அதிகரித்ததால் உள்நாட்டு நுகர்வுச்சந்தையும் சுருங்கிவருவதால் அவதியுற்றுள்ள பொருளாதாரம் மேலும் இன்னல்களைச் சந்திக்கிறது. சோசலிசத்தின்போது பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையேயான இடைவெளி குறைந்துகொண்டே வந்தது. திட்டமிட்ட பொருளாதாரத்தின் மூலமாக செல்வங்கள் முறைப்படியாக சமுதாயம் முழுமைக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டதையே இது உணர்த்துகிறது. ஆனால், குறைந்துகொண்டே வந்த இந்த இடைவெளி தற்போது அச்சமூட்டும் வகையில் அதிகரித்துவருகிறது. நாட்டின் ஒட்டு மொத்த செல்வத்தில் 41.4%ஐ வெறும் 0.1% சீனக் குடும்பங்கள் தங்கள் வசம் வைத்துள்ளன. தவிர, பத்துலட்சம் டாலருக்கும் அதிகமாக ரொக்கக் கையிருப்பு (பணமாகவும் எளிதில் பணமாக மாற்றக் கூடிய சொத்துக்களும்) கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையில் உலகிலேயே ஐந்தாவது நாடாக தற்போது சீனா உள்ளது. "செல்வந்தராவது மிகவும் சிறப்பானது" என்று டெங் ஒருமுறை கூறினார். இந்த "சிறப்பு" எப்படிப்பட்டதென்பதை சீனர்கள் தற்போது முதலாளித்துவத்தில் உணர்கின்றனர். இந்த சிறப்பு வசதிபடைத்த 5% மக்களுக்கானதே என்பதையும் மீதமுள்ள 95% மக்களுக்கு வறுமையும் ஏழ்மையும் மட்டுமே கிடைக்கும் என்பதையும் அவர்கள் அனுபவத்தின் வாயிலாக உணர்ந்துள்ளனர். தங்கள் முதலீட்டை எளிதாக பெருக்கிக் கொள்ளலாம் என்ற கனவுகளோடு கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை ஊக வாணிப பங்குச்சந்தையில் முதலீடு செய்த சீன மக்கள் சமீபத்திய சீனப் பங்குச் சந்தையின் தடாலடி வீழ்ச்சியால் பெருத்த நஷ்டமடைந்த பின்னர் முதலாளித்துவத்தில் உடனடி பணக்காரராவதால் ஏற்படும் மரண வலியை தற்போது நன்றாகவே உணர்ந்துள்ளனர்.

### அரசுத்துறையின் மேலாதிக்கத்தை சோசலிசத்தோடு குழப்பிக்கொள்ளுதல்

சீனாவில் அரசுத்துறை மேலான நிலையில் இருந்ததால், இன்னமும் தொடர்ந்து செல்வாக்கு செலுத்தும் நிலையில் இருப்பதால் இது குறித்து பலருக்கு குழப்பம் நிலவுவதை இங்கே குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது. சிற்சில போதாமைகளும் பாதைமாறல்களும் இருந்தாலும்கூட அங்கே இன்னமும் சோசலிசம் நிலவுவதாக இடதுசாரி அணியினர் உட்பட பலரும் குழப்பிக்கொள்கின்றனர். இது சரியல்ல. அரசுத்துறை எந்த அளவிற்கு கோலோச்சுகிறது என்பதை வைத்து பொருளாதாரத்தின் குணாம்சத்தை தீர்மானிக்க முடியாது. அது பொருளாதாரத்தின் செயல்பாட்டை ஆட்டுவிக்கும் அடிப்படை விதிகளின்படியும் அரசின் குணாம்சத்தினை வைத்துமே தீர்மானிக்கப்பட வேண்டும்.

உதாரணமாக, சுதந்திரத்திற்குப் பிறகு, இந்தியாவின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள்கூட மக்களை குழப்ப யத்தனித்தனர். இந்தியாவின் அரசுத்துறை சோசலிச பொருளாதாரத்தையும் தனியார் துறை முதலாளித்துவ பொருளாதாரத்தையும் குறிப்பதால் இந்தியப் பொருளாதாரமானது கலப்புப் பொருளாதாரம் என்று அவர்கள் கூறினர். இந்திய முதலாளித்துவத்தின் ஒட்டுமொத்த நலனுக்காக பெரிய தனியார் வங்கிகளை இந்திராகாந்தி அரசுடைமையாக்கிய போது பலர் அதை சோசலிச நடவடிக்கையென தவறாகப் புரிந்துகொண்டு அதை புகழ்ந்து பாராட்டினர். ஆனால், அது ஒரு பெரிய ஏமாற்று என்பதும் இந்திய முதலாளித்துவ வர்க்கமும் முதலாளித்துவ பொருளாதாரமும் அரசு மேற்பார்வையின் கீழ் அதிவேகமாக வளர்வதற்காக மேற்கொள்ளப்பட்ட திரைமறைவு நடவடிக்கையே என்ற ரகசியம் காலப்போக்கில் அம்பலமாகிவிட்டது.

அதேபோல், முதலாளித்துவ பாதையில் சீனா தன் பயணத்தை பின்னோக்கித் துவக்கிய நாள் முதலாகவே எதிர்ப்புரட்சிக்கான அளவுரீதியான மாற்றத்தின் செயற்போக்கு துவங்கி அரசுத்துறை மற்றும் அரசின் சோசலிச குணாம்சமும் சீரழியத் துவங்கிற்று. 13 ஆண்டுகளுக்கு முன்னரே எதிர்ப்புரட்சி முற்றுப்பெற்றுவிட்ட நிலையில் இன்று இருக்கும் சீனாவின் அரசுத்துறை என்பது முதலாளித்துவ துறையேயன்றி வேறெதுவுமல்ல.

### முதலாளித்துவத்தின் குப்பை கூளத்தையும் பிணியையும்தான் சீன சமூகச் சூழல் வெளிப்படுத்துகிறது

பொருளாதார நெருக்கடியில் எந்த அளவிற்கு ஆழமாக சீனா சிக்கியுள்ளது என்ற விவரங்களுக்கு போகுமுன் சீன பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் நிலைமை எவ்வளவு வேகமாக சீரழிந்து வருகிறது என்பதை சுருக்கமாகக் காண்போம். அந்நிய முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக சீனாவின் முதலாளித்துவ பாதையாளர்கள் நிறுவிய 700க்கும் அதிகமான சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் கதை திகிலூட்டுவனவாகும். இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் பணிபுரியும் தொழிலாளர்களில் பலர் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள். மிக முக்கியமாக, அவர்களில் பெரும்பாலோர் மணமாகாத இளம் பெண்கள். நாளொன்றுக்கு 12 மணி நேர வேலை, விடுப்புகள் கிடையாது, இடைவேளையின்றி நள்ளிரவு வரை தொடர்ச்சியாக பணியாற்றுதல் ஆகியனதான் பணிச் சூழலாகும். சில மோசமான தருணங்களில் தொழிற் சாலைக்குள் வைத்து தொழிலாளர்கள் பூட்டப்பட்டு 48 மணிநேரம் தொடர்ச்சியாக இடைவிடாது வேலை வாங்கப்பட்டனர். ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் ஒரு நாள் விடுப்புகூட வழங்கப்படாமல் ஆறு மாதங்கள் தொடர்ந்து தொழிலாளர்கள் கடுமையாக வேலைபார்க்க நிர்ப்பந்திக்கப்பட்டதாக செய்திகள் வெளியாயின. மிகக் கடுமையான மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் முதுகு வலி, தலைவலி, கண்பார்வைக்கோளாறுகள், கடுமையான சோர்வு, சுவாசக்கோளாறுகள், உறக்கமின்மை போன்றவற்றால் அவதிப்படத்துவங்கினர். சில நோவுகளில் சுத்தமாக சக்தியிழந்ததன் காரணமாக இளம் பெண்கள் பணியிடத்திலேயே மூர்ச்சையடைந்தனர். அவர்கள் பொருளாதார ரீதியாக மட்டுமின்றி தொழிற்சாலை மேற்பார்வையாளர்களால் பாலியல் கொடுமைகளுக்கும் சுரண்டலுக்கும் ஆளாக்கப்பட்டனர். தொழிலாளர்களுக்கு எவ்விதமான சமூகப்பாதுகாப்போ பொருளாதார பாதுகாப்போ கிடையாது. அதிமாசுபட்ட சீனத்து நகரங்களில் வாழும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் வாழ்க்கை வெறுமையும் வறுமையும் நிறைந்தே காணப்படுகிறது.

அடிமை நிலை, பிச்சை எடுத்தல், விபச்சாரம், சித்திரவதை, மனிதர்களை கடத்தி விற்றல், நாய்க் கூண்டைக்காட்டிலும் மோசமான சூழல்களில் குழந்தைகளை சிறைப்படுத்தி வைத்தல், கிரிமினல்களின் அதிகாரப்போக்கு, மட்கி சிதிலமுற்ற ஏகாதிபத்திய கலாச்சார ஊடுருவல் ஆகியன குறித்த செய்திகள் முதலாளித்துவ சீனத்திலிருந்து வந்த வண்ணம் உள்ளன. மருத்துவ சேவைகள் பெரும்பாலும் தற்போது தனியார் உடைமையின் கீழுள்ளது. இதனால் மருத்துவ சேவையின் விலையும் மிக அதிகமாக உள்ளது. அரசு முதலீடு போதுமான அளவிற்கு இல்லாததால் பொதுச்சுகாதாரமுறையும் ஆரம்பக்கல்விமுறையும் திட்டமிட்ட முறையில் சீரழிந்துவருகின்றன. உள்ளாட்சி அமைப்புகள் தம் விருப்பம்போல வரிபோடுவதால் மக்களின் தோளில் பொருளாதாரச் சுமை கூடுகிறது. சட்டவிரோத நில அபகரிப்புக்கு எதிரான எதிர்ப்புப் போராட்டங்கள் வலுக்கின்றன. முதலாளித்துவம் மீண்டும் நிறுவப்பட்ட பிறகு மக்கள் எவ்வாறு மேன்மேலும் ஏழ்மையில் மூழ்கி கதியற்றவர்களாகிறார்கள் என்பதை பரிதாபத்திற்குரிய இந்த சமூகச் சூழல் சுட்டிக்காட்டுகிறது. ஷாங்காய், பீஜிங், கேண்டன் போன்ற விஸ்தரித்துவரும் நவீன நகரங்களின் நேர்த்தியான கம்பீர அழகால் சீனத்தின் இப்பக்கம் மூடி மறைக்கப்படுகிறது. ஆனாலும், மட்கி மடியும் தருவாயிலுள்ள துர்நாற்றமெடுக்கும் முதலாளித்துவத்தின் சீழ் வடியும் புண்கள் மூடிய திரையையும் கிழித்துக் கொண்டு நச்சுத்தன்மையோடு வெளிப்படுகின்றன.

### சீன முதலாளித்துவ பொருளாதாரத்தின் தற்போதைய இக்கட்டான நிலை

சீன முதலாளித்துவ பொருளாதாரத்தின் தற்போதைய நிலைமையானது தனது சொந்த விதிகள் உருவாக்கிய தீர்க்கஇயலா கடுமையான நெருக்கடியால் உலகளாவிய அளவில் பீடிக்கப்பட்டுள்ள முதலாளித்துவத்தின் தவிர்க்கஇயலாத விளைவுதான் என்பதை ஐயம் திரிபற நாம் கூறமுடியும். சீனத்தின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் கொடுத்து வளர்ச்சி பற்றி பீற்றிக்கொள்வதை தவறாமல் செய்தனர். அதோடு கூடவே, அங்குள்ள மலிவான திறமையான உழைப்புச்சக்தியை சாதகமாக்கிக்கொண்டு அந்நிய மூலதனத்தை முதலீடு செய்ய வைத்து சீனாதான் உலகிலேயே மிகவும் விரும்பப்படும் உற்பத்திக் கேந்திரம் என்பதாக மாற்றிடுமாறு அது ஈர்த்தது. ஆனால் மக்களின் வருவாய் குறைவின் காரணமாக உலகளாவிய அளவில் பொருட்களுக்கான தேவை (டிமான்ட்) படுவீழ்ச்சி அடைந்ததையடுத்து – மட்கி மடியும் தருவாயிலுள்ள பிற்போக்கு முதலாளித்துவத்தின் தவிர்க்கஇயலா விளைவு – சீனா இரு பக்கத்திலும் அடிவாங்கியது. சீன நாணயத்தின் (கரன்சியின்) மதிப்பை செயற்கையாக குறைப்பதால் ஏற்றுமதியில் தற்காலிகமாக கொஞ்சம் தேறலாமேயொழிய தனது முந்தைய நிலைக்கு ஒருக்காலும் வரமுடியாது.

ஏற்றுமதியை முன்னிறுத்தும் பொருளாதார வளர்ச்சி என்ற முன்மாதிரி தனது இயல்பான இறுதிக் கட்டத்தை அடைந்ததையடுத்து, அரசின் முன்முயற்சி

தொடர்ச்சி 7ம் பக்கம்

## சீனப்பொருளாதாரத்தின் வீழ்ச்சி

# சீரழிந்த முதலாளித்துவத்தின் தீமைகளனைத்தையும் தற்போதைய சீனப் பொருளாதாரத்தில் காணலாம்

6ம் பக்கத் தொடர்ச்சி

யில் ஆதாயம் தரும் நிரந்தர வேலைவாய்ப்புகளை மேன்மேலும் அதிக அளவில் உருவாக்குவதன் மூலம் மக்களின் வாங்குசக்தியை உயர்த்துவதற்கு பதிலாக வளர்ச்சியை முடுக்கிவிடுவதற்கு சுதந்திர–சந்தைப் பொருளாதார சீர்திருத்தத்தை ஆக்ரோஷமாக பின்பற்றுவதை சீன அதிபர் தேர்ந்தெடுத்தார். சர்வதேசிய நிதி அமைப்புமுறை ஏறக்குறைய தகர்ந்து தரைமட்டமானது மட்டுமின்றி உலகளாவிய பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுத்த சப்–ப்ரைம் நெருக்கடியிலிருந்தும் காத்துக்கொள்வதற்கு இது உதவும் என அவர்கள் எண்ணினர். எனவே, அவர்கள் ஒரு ‘மீட்டெடுப்பு திட்டத்தை’ முன்வைத்தனர். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்கனவே ஏறக்குறைய பாதியாக முதலீட்டு விகிதம் இருந்த பொருளாதாரத்தில் இத்திட்டம் மூலதனத்தை மேலும் ஊக்குவித்தது. ஆயினும் இது ஒன்றும் பலனளிப்பதாகத் தெரியவில்லை.

முதலாவதாக, சுதந்திர சந்தைப் பொருளாதாரத்தின் வரையறைப்படி அதைக் கட்டுக்குள் வைக்க முடியாது. அடுத்ததாக, நிர்க்கதியான நிலைக்கு மேன்மேலும் தள்ளப்படும் பெரும்பாலான உழைக்கும் மக்களின் உண்மையான வருமானம் மிகவேகமாக வீழ்ந்து வருவதால் உள்நாட்டு சந்தையில் டிமான்ட் சுருங்குகிறது. தற்போது பொருளாதாரம் குளிர்ந்து வரும் (மங்கிவரும்) நிலையில், கூலிகள் ஒரே நிலையில் உறைந்து போயிருப்பதும் (அப்படியே உயராமல் இருப்பதும்) அச்சமூட்டும் வகையில் அதிகரித்துவரும் வேலைவாய்ப்பின்மையால் நிலைமை மேலும் மோசமாகி வருகிறது. உழைப்பின் சப்ளை தேவையைக் (டிமான்டை) காட்டிலும் ஏராளமாக அதிகரித்துள்ளது என்ற சுடும் உண்மை வேலைவாய்ப்பின்மை அதிகரித்துள்ளது என்பதற்கு மற்றுமொரு நிரூபணமாகும்.

இதற்கு மாறாக, செயற்கையாக பொருளாதாரத்தை தூண்டிவிடும் இத்தகைய நடவடிக்கைகள் மிகப்பெரும் அளவில் கடன் வாங்குவதற்கும் அக்கடன் தொகையைக் கொண்டு பிரதானமாக உள்கட்டமைப்பிலும் கட்டுமான வியாபாரத்திலும் முதலீடு செய்வதற்கும் பிராந்திய (ப்ரொவின்ஷியல்) அரசாங்கங்களையும் பொதுத்துறை நிறுவனங்களையும் ஊக்கப்படுத்தின. சீனத்தின் இத்தகைய நிதிச் சூழ்நிலைமையில் கோலோச்சிய பொதுத்துறை வங்கிகளிலிருந்து பெற்ற கடனைக்கொண்டுதான் இம்முதலீடுகளில் பெரும்பாலானவை மேற்கொள்ளப்பட்டன. ஆனால், ரியல் எஸ்டேட் துறையில் பெரும் நீர்க்குமிழிகளுக்கான அறிகுறி தென்படத்துவங்கியதும் அத்தகு கடன்களில் அதிகமான பணத்தை போடவேண்டாம் என வங்கிகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அவர்களின் வைப்புத்தொகைகளுக்கும் கடன் விகிதங்களுக்கும் கூட உச்சவரம்பு விதிக்கப்பட்டன. “நிழலுலக வங்கிச்சேவை”யின் வளர்ச்சியை இது ஊக்குவித்தது. முறைப்படுத்தப்பட்ட ஆர்பிட்ரேஜ் என்ற வடிவத்துடன் இவை வளர்ந்தன. வங்கிகளல்லாத பல்வேறு நிதிநிறுவனங்களும் டிரஸ்டுகளும் “செல்வவள மேலாண்மை ப்ராடக்ட்” (சரக்கு) களை உருவாக்கியதால் இவ்வளர்ச்சி சாத்தியமாயிற்று. இந்த “ப்ராடக்ட்” (சரக்கு) களைக் கொண்டு இந்த நிதி நிறுவனங்கள் சேமிப்பாளர்களுக்கு அதிக அளவில் தொடர் ஆதாயங்களையும் ரியல் எஸ்டேட் மற்றும் கட்டுமானத் துறைகளுக்கு நிதிக்கடனும் வழங்கின. இது ரியல் எஸ்டேட் வியாபாரத்துக்கு திடீர் வளர்ச்சியை கொடுத்தது. கொடுக்கப்படும் கடன்களில் பாதியளவு (இதில் பெருமளவு கடன் முறைப்படுத்தப்படாத நிழலுலக வங்கிச்சேவை நிறுவனங்களிலிருந்துதான் வருகின்றன என்பதறிக) நேரடியாகவோ மறைமுகமாகவோ ரியல் எஸ்டேட் சந்தையையும் வீட்டு கடனை நோக்கியே வழங்கப்பட்டன. இதனால் சீனத்தின் முதன்மையான பெருநகரங்களில் நிலச்சொத்து குமிழிகள் தோன்றுவதற்கு ஊக்கம் ஏற்பட்டது. வெளியான அறிக்கை ஒன்றின்படி, 2013ம் ஆண்டின் இறுதியில் சீனாவின் கார்ப்பொரேட் கடன்களின் மதிப்பு சுமார் 12 ட்ரில்லியன் (அதாவது 12 லட்சம் கோடி) டாலர்களாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியைக்காட்டிலும் 120% அதிகமாகும். நிழலுலக வங்கிச்சேவை நிறுவனங்களால் வெளியிடப்பட்ட “கடன் தங்கத்திற்கு சமம்” போன்ற நம்பிக்கை ப்ராடக்டுகளில் முதலீடுகள் மூலம்தான் பெரும்பாலான இத்தகு கடன்களுக்கு நிதியளிக்கப்பட்டிருக்கிறது. சீனாவின் மத்திய வங்கியான சீன மக்கள் வங்கி சமீபத்தில் வெளியிட்ட புள்ளிவிவரங்களின்படி, நிழலுலக வங்கிச்சேவைத் துறையை ஆக்கிரமித்துள்ள டிரஸ்ட் கம்பெனிகளால் வழங்கப்பட்ட கடன்களின் அளவு ஆண்டிற்கு 23% அதிகரித்து 2013ம் ஆண்டில் ஏறக்குறைய 3லட்சம் கோடி டாலர் அளவைத் தொட்டுள்ளது. அதாவது மொத்தமாக வழங்கப்பட்ட கடனில் இது 30% ஆகும். உள்ளாட்சி அரசாங்கங்களும் பெருமளவில் இக்கடன்களைப் பெற்றன. கடன் பெறுவதற்காகவும் நிதி மேற்கட்டுமான திட்டங்கள் மற்றும் கௌரவத்துக்காக டாம்பீகத்துக்காக மேற்கொள்ளப்படும் திட்டங்கள் ஆகியவற்றை பெறுவதற்காகவும் பட்ஜெட்டுக்கு அப்பாற்பட்ட உள்ளாட்சி அரசாங்கங்க நிதி வழிகளை ஏற்படுத்தின. இந்த உள்ளாட்சி அரசாங்கங்கள் அதிகாரபூர்வ அமைப்பாகிய சீன வளர்ச்சி வங்கியிடமிருந்து மட்டுமின்றி டிரஸ்டுகளிடமிருந்தும் கடன் வாங்கின. சீன தேசிய தணிக்கை அலுவலக அறிக்கையின்படி 2010ம் ஆண்டு இறுதியிலிருந்து 2013ம் ஆண்டு ஜூன் மாதத்திற்கு இடைப்பட்ட காலத்தில் உள்ளாட்சி அரசாங்கங்களின் கடன் 70% (3 லட்சம் கோடி டாலர்கள்) அதிகரித்துள்ளது. அமெரிக்க மற்றும் மேற்கத்திய ஏகாதிபத்திய முதலாளித்துவ நாடுகளைப்போலவே கடன் செலுத்தத் தவறியவர்களை அரசு கஜானாவிலிருந்து நிதி வழங்கி காப்பாற்றியது. ஆயினும், நிதிச் சந்தையின் ஸ்திரமின்மையை சமாளிக்க இயலவில்லை.

### கடனால் உந்தப்பட்ட பொருளாதாரத்தின் நீர்க்குமிழி

முதலாளித்துவ உலகில் இதுபோன்று கடன் கொடுத்து உந்தப்பட்ட செயற்கையான பெரும் வளர்ச்சிக்குப்பின்பு எப்போதுமே கடனை திருப்பிச் செலுத்தத் தவறுதல், அசல் மட்டுமின்றி வட்டியைக் கூட கட்டத்தவறுதல் ஆகியன எப்போதுமே ஏராளமாக நிகழும் என்பதை முதலாளித்துவத்தின் விதிகளைப் பற்றிய பரிச்சயம் உள்ள எவரும் நன்கறிவர். மக்களின் வருவாய் வீழ்ச்சி, இத்தகு கடன்கள் மூலம் வாங்கப்பட்ட சொத்துக்களைக் கொண்டு பெருமளவில் ஊக வாணிபம் செய்தல், இதன் தொடர் விளைவான தேவை (டிமான்ட்) குறைதல் ஆகியனவே இவ்வாறு கடன்களை திருப்பிச்செலுத்தத் தவறுவதற்குக் காரணங்களாகும். சீனத்திலும் இதுதான் நடந்தது. 2013ம் ஆண்டு பொருளாதார நிபுணர் கான் லி என்பவர் நடத்திய சர்வேயின்படி, சீனாவின் மொத்த செல்வத்தில் 65% ரியல் எஸ்டேட்டில் முதலீடு செய்யப்பட்டுள்ளது தெரியவந்தது. இம்முதலீடுகளில் பெரும்பாலானவை ஐயத்திற்கிடமின்றி ஊகவாணிபம்தான். ஏனெனில் வீட்டு கடனுக்கான தேவையில் (டிமான்டில்) 42% ஏற்கனவே குறைந்தது ஒரு வீடாவது சொந்தமாகக் கொண்டுள்ளோரிடமிருந்துதான் வந்தது. பல இடங்களில் இந்த புதிய சொத்துக்கள் ஆக்கிரமிக்கப்படாமல் வெறுமையாகக் கிடக்கின்றன. டிமான்ட் குறைந்துவிட்டது என்பதையே இது காட்டுகிறது.

கட்டப்பட்டு விற்கப்படாத வீடுகளின் எண்ணிக்கை எக்கச்சக்கமாக அதிகரித்து நிலத்தின் மதிப்பு வீழத்துவங்கியதையடுத்து அமெரிக்காவில் சப்–ப்ரைம் நெருக்கடி வெடித்ததைப்போன்றே சீனத்தின் நிலச்சந்தை என்ற நீர்க்குமிழியும் வெடித்தது. இதன் விளைவாக, குறுகிய காலத்தில் நல்ல லாபம் சம்பாதித்துவிடலாம் என்ற கனவோடு தங்களது வாழ்நாள் சம்பாத்தியம் மொத்தத்தையும் முதலீடு செய்த அல்லது பெருமளவு கடன் வாங்கி முதலீடு செய்த பல லட்சக்கணக்கான சிறு சில்லரை வர்த்தக முதலீட்டாளர்கள் மிகப்பெரும் நஷ்டத்தை சந்தித்தனர். நிலச்சொத்துக்களின் மதிப்பு வீழ்ந்ததால் அச்சொத்துக்களின் மதிப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பங்குகளின் விலையும் வீழ்ந்தது. இவையனைத்தும் ஒன்றை உணர்த்துகின்றன. சீனப் பொருளாதாரத்தின் தனித்தனி பெட்டிகளில் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதவையாக கருதப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் உண்மையில், நெருக்கடி பீடித்த முதலாளித்துவத்தில் உலகளாவிய முதலாளித்துவ நிதியமைப்புமுறை பின்னிய வலையின் ஒன்றரக்கலந்த பகுதியே அது.

சீனத்தின் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் உலகமய தாராளமயக் கொள்கைகளின் நாசகரமான பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, நிதித்துறையை தாராளமயப்படுத்தி தொடர்ந்து இன்னமும் அவற்றை ஏற்று நடைமுறைப்படுத்திவருவதால், மேற்சொன்ன விளைவு தவிர்க்கமுடியாததாகும். சீன மக்கள் குடியரசின் அரசு கவுன்சிலின் தற்போதைய தலைவரான லி கேக்யுயாங் அவர்கள் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றில், ஊகவாணிபத்தில் புழங்கும் மூலதனத்தை கட்டுக்குள் கொண்டு வருவதற்கு பதிலாக, “சந்தையை வலுப்படுத்தி சமூக படைப்பாற்றலை தூண்டிவிடுதல்” என்பதை வலியுறுத்தினார். “எய்தப்பட்ட அம்பை எவ்வாறு திரும்பப்பெற முடியும்? சீர்திருத்தங்கள் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்” என்று அவர் கூறினார்.

உலக வங்கியின் பரிந்துரைகளான அரசுச் சேவைகள் மற்றும் அறிவுரைகள் வழங்குவோர் என அரசுத்துறைகளை தாழ்த்துதல், உள்கட்டுமானம், எஃகு, எரிசக்தி, மற்றும் இதர “தொட்டுணரக்கூடிய சரக்குகள்” ஆகியவற்றின் உற்பத்தியிலிருந்து அரசு விலகிக்கொள்ளுதல், இவற்றை தனியார் முதலாளிகள் வசம் விட்டுவிடுதல் போன்ற பரிந்துரைகளை தீவிரமாக நடைமுறைப்படுத்தியே தீருவது என சீன ஆட்சியாளர்கள் சபதமேற்றிருப்பதையே இது தெளிவாகக் காட்டுகிறது. வங்கிச்சேவை முறை முழுமையும் வியாபாரமயமாக்கப்படவேண்டும் என்றும் வட்டி விகித கட்டுப்பாடுகள் சந்தைக் கோட்பாடுகளுக்கேற்ப தளர்த்தப்படவேண்டும் என்றும் ஊகவாணிப பங்குச்சந்தை சுறுசுறுப்புடன் செயல்படக்கூடியதாக ஆக்கப்படவேண்டும் என்றும் சீனத்து நிதிவர்த்தகத்துறையை உலகளாவிய முதலாளித்துவ–ஏகாதிபத்திய நிதியமைப்பு முறையுடன் ஒருங்கிணைக்கவேண்டும் என்றும் அவர்கள் மேற்கொண்டு பரிந்துரைகள் செய்கின்றனர். முதலீடு, சில்லரை விற்பனை, எற்றுமதி, இறக்குமதி, மின்சக்தி உற்பத்தி, கட்டுமான மற்றும் வங்கிக்கடன் ஆகியவற்றில் தொய்வு ஏற்பட்டிருப்பதோடு வீட்டு முதலீட்டு நீர்க்குமிழியை சமாளிக்கவேண்டிய நிலை, பரவலான தாராளமயம், முதலாளித்துவ சந்தையை தம்மிஷ்டம்போல கையாளுதல் ஆகிய பரிந்துரைகள் பொருளாதாரத்தை மேலும் ஆழமான நெருக்கடியிலேயே சிக்கவைக்கும்.

### இப்பின்னடைவிற்கான காரணம் என்ன?

இவ்வாறு தலைகீழாக சீனப்பொருளாதாரம் பின்னடைவிற்குச் செல்ல வேண்டிய நிலை எதனால் ஏற்பட்டது என்பது அனைவர் மனதிலும் எழும் கேள்வியாகும். அரசியல் மற்றும் கலாச்சாரத் துறைகளில் முதலாளித்துவ தாக்குதலின் காரணமாக சோசலிசக் கட்டுமானத்தையும் சோசலிச பொருளாதாரத்தையும் சீரழிவிலிருந்து பாதுகாப்பதற்காக லெனின், ஸ்டாலின் போதனைகளுக்கேற்ப பிற்போக்கு முதலாளித்துவ சிந்தனைகள் தூண்டிவிடப்படுவதை முன்னதாக கண்டறிந்து தடுப்பதற்காகவும் சோசலிசத்தில் வர்க்கப்போராட்டத்தை உக்கிரப்படுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய மாசேதுங் சிந்தனையை திருத்தல்வாத டெங் தலைமை புறந்தள்ளியது என்பதை நாம் அனைவரும் அறிவோம். மாவோவால் விளக்கியுரைக்கப்பட்ட ‘அதிகாரம் செலுத்துவதில் அரசியல்’, ‘வர்க்கப் போராட்டத்தை கேந்திரமான இணைப்பாக கொள்ளுதல்’ ஆகியவற்றை மிகுந்த பிரக்ஞையோடு கைவிட்டுவிட்டு “பொருளாதார கட்டுமானம் என்ற மையக்கடமைக்கு கட்சிப்பணிகள் முழுமையையும் கீழ்நிலைப்படுத்தி அடிபணியச்செய்யவேண்டும்” என்று திருத்தல்வாத டெங் தலைமை ஆணையிட்டது.

மார்க்சிசம்–லெனினிசத்தின் அடிப்படை போதனைகளை கொச்சைப்படுத்திவிட்டு சீனத்தில் சோசலிச மாற்றம் முற்றுப்பெற்றுவிட்டது என்றும் அங்கே சுரண்டல்காரர்களும், வர்க்கமும் வர்க்கப் போராட்டமும் இனியும் இல்லை என்றும் அவர்கள் அறிவித்தனர். இதற்குமேல் அங்கே வர்க்கப்போராட்டம் நிலவவில்லை என்பதை நிரூபிப்பதற்காக முன்பு வர்த்தகர்களாகவும், தொழிலதிபர்களாகவும், நிலச்சுவான்தார்களாகவும் பணக்கார விவசாயிகளாகவும் இருந்தோரெல்லாம் தற்போது உழைக்கும் மக்களாக இருக்கின்றனர் என்று கூறினர். சோசலிச பொருளாதாரத்தை திரித்து திருப்பிப்போட்ட இவர்கள், உற்பத்தியைப் பெருக்கி நவீனமயத்தை தழுவுகிறோம் என்ற பெயரில் வேளாண் பொருட்கள், அவற்றின் உப பொருட்கள் ஆகியவற்றின் விலையை உயர்த்தினர். அதோடு, உற்பத்தி அல்லது விளைச்சலைக் கொண்டு தீர்மானிக்கும் ஆதாய விலையை நிர்ணயித்து குடும்பத்திற்கு சொந்தமான மனைகளை மீண்டும் கொண்டுவந்து

தொடர்ச்சி 8ம் பக்கம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication: First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Post.Reg.No:TN/CCN/429/2015-17
WPP Licence No: TN/PMG(CCR)/WPP-373/2015-17
Registered with the Registrar of Newspapers for India No : 62018/88

## சீனப்பொருளாதாரத்தின் வீழ்ச்சி

# சீனப் பாட்டாளி வர்க்கம் ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் கட்சியை வளர்த்தெடுத்து, புரட்சியின் மூலம் முதலாளித்துவத்தை தூக்கியெறிந்து சோசலிசத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும்

7ம் பக்கத் தொடர்ச்சி

அதை விஸ்தரித்தனர். அவர்களைப் பொறுத்தவரை, மாவோவுக்கு பிந்தைய காலத்திய சீனத்தில் நிலவிய பிரதான முரண்பாடு முன்னேறிய உற்பத்தி உறவுகளுக்கும் பின்தங்கிய உற்பத்தி சக்திகளுக்குமேயாகும்.

அரைக்காலனிய, அரை நிலப்பிரபுத்துவ கட்டுத்தளைகளிலிருந்து புரட்சியானது சந்தேகத்திற்கிடமின்றி உற்பத்திச் சக்திகளை விடுவித்தது என்றும் உற்பத்தி சாதனங்களின் மீதான உடைமையில் சோசலிச மாற்றமானது உற்பத்தி சக்திகளை வளரச் செய்தது என்றும் மாசேதுங் மிகச்சரியாக எடுத்துக் காட்டினார். உற்பத்தி சக்திகள் என்பன மனிதன், இயந்திரம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாகும். அதாவது மனித உழைப்பு, தொழில்நுட்பம் ஆகிய இரண்டுமாகும். சித்தாந்தம்–கலாச்சாரம்–அறநெறி என அனைத்து களங்களிலும் அறிவாதாரயியலின் (எபிஸ்டமாலஜி) அனைத்து கிளைகளிலும் மனித அறிவுவளர்ச்சி அதிகரிப்பது இருவகைப்பட்ட உழைப்புச்சக்தியின் வளர்ச்சிக்கு அவசியமாகும். இந்தக் கருத்தியலை அறிவுக்கூர்மையோடு விளக்கியுரைத்து, “யுஎஸ்எஸ்ஆர்–ல் சோசலிச பொருளாதார பிரச்சினைகள்” என்ற தனது புகழ்பெற்ற படைப்பில் ஸ்டாலின் அவர்கள் கூறுவதாவது: சோசலிசத்திலும்கூட உற்பத்தி உறவுகளைவிட மறுக்க முடியாத அளவிற்கு உற்பத்தி சக்திகளே முன்னேறிச் செல்கின்றது. எனவே, அடித்தள பொருளாதார கட்டுமானத்தில் சோசலிச மாற்றத்தை ஏற்படுத்துவதோடு மேற்கட்டுமானத்தில் சோசலிச சித்தாந்த போராட்டத்தின் மூலமாகவும் இடைவிடாத தொடர்ச்சியான சித்தாந்த–அரசியல்–கலாச்சார மேம்பாட்டின் மூலமாகவும் மட்டுமே சீன மக்கள் தங்களுடைய விழிப்புணர்வுமிக்க இயக்காற்றல்மிக்க பங்கினை ஆற்ற இயலும். இவ்வாறு செய்வதன் மூலம் மட்டுமே அனைத்து தரப்பிலிருந்தும் வருகின்ற முதலாளித்துவ தாக்குதலிலிருந்து சோசலிசத்தையும் சோசலிச பொருளாதாரத்தையும் பாதுகாத்து எதிர்ப்புரட்சி அபாயத்தை குறைத்திட முடியும்.

### பிரச்சினை உருவாகி வளர்ந்ததன் மூல காரணத்தை தோழர் சிப்தாஸ் கோஷ் மிகச்சரியாக சுட்டிக்காட்டினார்

நவீன திருத்தல்வாதம், சீனத்தின் முதலாளித்துவ பாதையாளர்கள், சீனக்கலாச்சாரப்புரட்சி ஆகியவற்றை பகுப்பாய்வு செய்யும் போக்கில் இப்பிரச்சினையை மேலும் விரிவாகவும் ஆழமாக ஊடுருவியும் விளக்கிய தோழர் சிப்தாஸ் கோஷ் “வலுவான அடித்தளத்தின் மீது திடப்படுத்தி பலப்படுத்துவதன் மூலம் சீனா தனது பொருளாதாரத்தை அதிவேகமாக மேம்படுத்தவேண்டுமானால் சரியான அரசியல் பாதை மற்றும் சித்தாந்தத்தின் அடிப்படையில் மக்களுக்கும் கட்சிக்கும் இடையேயான ஒற்றுமையை பலப்படுத்தவேண்டியதும் மக்களிடையே புரட்சிகரமான அர்ப்பணிப்புணர்வினை அதிகரிக்க வேண்டியதும் அவசியமாகும்” என்று கூறினார்.

மேலும், “ஒரு சோசலிச நாட்டின் பொருளாதாரம், இராணுவ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் பிரமிக்கத்தக்க வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு ஏற்ப சமூகத்தின் சித்தாந்த–கலாச்சார–அறிநெறித் தரமும் ஒட்டுமொத்தமாக உயர்த்துப்பட்டு சோசலிச பொருளாதாரத்தின் அனைத்துப்பக்க வளர்ச்சிக்கான தேவையோடு ஒத்துப்போகச் செய்யாமற்போனால், இதனால் ஏற்படும் இடைவெளியானது சித்தாந்த துறையில் தரவீழ்ச்சிகே இட்டுச்செல்லும்... இது சீர்திருத்தவாதம்–திருத்தல்வாதத்தின் தோற்றத்திற்கு வழிவகுக்கும்... அதற்கு சாதகமான சூழ்நிலை ஏற்படுகையில் எதிர்ப்புரட்சியின் எழுச்சிக்கு இட்டுச்சென்று இதன் மூலம் சோசலிசத்தையே அபாயத்திற்குள்ளாக்கி முதலாளித்துவம் மீண்டும் நிறுவப்படும். இவையனைத்தும் மார்க்சிசம்–லெனினிசம் என்ற பதாகையை வீசிக்கொண்டே சோசலிச கோஷங்களை எழுப்பிக்கொண்டே நடந்தேறும் என்பதையே சோவியத் அனுபவங்கள் நமக்கு காட்டுகின்றன” என்றும் தோழர் சிப்தாஸ் கோஷ் கூறியுள்ளார்.

“சோசலிச பொருளாதார மறுகட்டுமானத்தின் போது ஒரு புதிய வகையான பொருளாதாரவாத மனப்பாங்கு தோன்றுவதற்கான அபாயம் உள்ளது. பொருள் ரீதியான ஊக்குவிப்பும் ஆதாயங்களும் எதிர்பார்க்கும் மனப்பான்மை சாதாரண தொழிலாளர்களிடையே வளர்வதற்கான அபாயம் உள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், பொது தொழிலாளர்களுக்கு சோசலிசம் என்பது அதிகப்படியான பலன்கள் மற்றும் வசதிகளுமே என்று பொருள்படுமேயன்றி வேரெதுவும் பொருள்படாது. இதன் விளைவாக, அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்ற உந்துதலின் பின்னால் ஒரு சாதாரண தொழிலாளியின் மனதில் சலுகைகளும் பொருள்சார்ந்த பலன்களுமே ஓடுகின்றன. இவையெல்லாம் இல்லாமல் சோசலிசம், அதிகப்படியான உற்பத்தி ஆகியன அவரைப்பொறுத்தவரை அர்த்தமற்ற பேச்சுக்களாகும். சோசலிசத்தில் உற்பத்தியின் வளர்ச்சியோடு தொழிலாளர்களும் தானாகவே மேன்மேலும் அதிகப்படியான பலன்களைப்பெற்று உழைக்கும் மக்களின் வாழ்க்கைத்தரம் தொடர்ந்து உயரும். ஆனால், உற்பத்தி அதிகப்படுத்துவதை சொந்த ஆதாயங்களோடு ஒப்பிடுவது என்பது சோசலிசத்தின் அடிப்படையான நோக்கங்களுக்கும் குறிக்கோள்களுக்கும் பொருந்தக்கூடியதல்ல. இத்தகைய மனப்பான்மை தொழிலாளர்களிடையே ஒரு தனிவகைப்பட்ட தனிநபர்வாத சந்தர்ப்பவாத மனப்பான்மையை பெருகச்செய்யும். எனவே, தங்களது சொந்த நாட்டின் முன்னேற்றம், உலக பாட்டாளி வர்க்க புரட்சி ஆகியவற்றின் நலன்களுக்காக உற்பத்தி அதிகரிப்பிற்கு தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும் என்று தொழிலாளர்கள் உண்மையிலேயே உணரும் வகையில் அவர்களது மனப்பான்மை வார்க்கப்படவேண்டும்”.

... “இதன் விளைவாக, சோசலிச அமைப்புமுறையில் எழும் இந்த பொருளாதாரவாதம் சொந்த நலனை சமூக நலனோடு ஒன்றர ஐக்கியப்படுத்திக் கொள்வதற்கு மிகப்பெரும் தடையாக விளங்குகிறது. ‘சோசலிச தனிநபர்வாதம்’ என்று நான் ஏற்கனவே பெயரிட்ட சோசலிச அமைப்புமுறையில் உள்ள இந்த பொருளாதாரவாதம்–தனிநபர்வாதமானது பாட்டாளிவர்க்க புரட்சிகர அரசியலிலிருந்து தொழிலாளி வர்க்கத்தின் கவனத்தை திசைதிருப்ப உதவுகிறது” என்றும் தோழர் சிப்தாஸ் கோஷ் கூறியுள்ளார்.

“கட்சித் தலைமையை கைப்பற்றிய பிறகு மார்க்சிசம், கம்யூனிச கண்ணோட்டம், நடத்தை நெறிகள், நடவடிக்கைகள், செயல்முறைகள் ஆகியவற்றின் புரட்சிகர சாராம்சத்தை சிதைத்து மாசுபடுத்துவதற்கு திருத்தல்வாதிகள் முனைவர். மெதுவாக, கள்ளத்தனமாக, மிக நுட்பமான வழிகளில், சிறுகச்சிறுக மாசைக்கலந்து புரட்சிகர சாராம்சத்தை சிதைக்க முயலும் இவர்கள் இறுதியில் வெறும் வாய் வார்த்தைகளிலும், கோஷங்களிலும் சொற்பொழிவுகளிலும் மட்டுமே மார்க்சிசம்–லெனினிசம் எஞ்சியிருக்கும் என்ற அளவிற்கு சமுதாயத்தை சீரழித்து தரந்தாழ்த்திவிடுவர். அவ்வாறு ஆனபின்னர், சோசலிசத்தின் ஆன்மா முற்றிலுமாக சிதைவுற்றதாகி யதார்த்தத்தில் சோசலிசத்தினிடத்தில் முதலாளித்துவமே இடம்பெறும்” என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

இந்த படுநாசத்தைத் தவிர்ப்பதற்காக, மார்க்சிசம்–லெனினிசத்தை மேம்படுத்தி செழுமைப்படுத்தும் போக்கில் தோழர் சிப்தாஸ் கோஷ் மேலும் நமக்கு அளித்த போதனையாவது: “தங்களது சொந்த நலனை மகிழ்ச்சியோடும் நிபந்தனையின்றியும் சமூக நலனுக்கு தாழ்வாக வைக்க யாரால் இயலுகிறதோ, மற்ற எல்லாற்றைக்காட்டிலும் புரட்சியின் நலனை மேலாக வைக்கமுடிகிறதோ, கட்சி மற்றும் புரட்சியின் நலனுக்கு கீழாக சொந்த நலனை வைக்கமுடிகிறதோ அவர்கள் மட்டுமே உண்மையான கம்யூனிஸ்டுகளாக கருதப்படுவர் என்று இதுகாறும் நியதியாக இருந்தது. இவையே கம்யூனிச ஒழுக்க நெறிகளின் உச்சபட்ச தரமாக இதுகாறும் கருதப்பட்டது. ஆனால், இன்றைய வாழ்வில் எழுகின்ற புதுப்புது சிக்கல்களின் பின்புலத்தில் இந்த தரநிர்ணயம் போதுமானதாக கருதப்படமுடியாது... சோசலிசத்தின் முழுமையான வெற்றிக்காக போராட்டம் நடத்துகையில் தனிநபர் தேவைக்கும் சமூகத் தேவைக்கும் இடையேயான பகைத்தன்மையுள்ள முரண்பாட்டை பகையற்ற முரண்பாடாக மாற்றுவதே தனிநபரின் விடுதலை’கான போராட்டத்தின் பிரதான நோக்கமாக இருக்கவேண்டும். ... ஊசலாட்டமற்ற அர்ப்பணிப்பு மற்றும் இடையறாத கண்காணிப்பு ஆகியவற்றின் மூலமாக சொந்த நலனை சமூகத்தின் நலனோடு முழுமையாக ஐக்கியப்படுத்திக்கொள்வதற்கான உக்கிரமிக்க கடுமையான போராட்டம் நடத்தப்படவேண்டும். (தே.ப. தொகுதி 1) புரட்சியை சாத்தியமாக்குவதற்கு மட்டுமின்றி சோசலிசத்தை பாதுகாப்பதற்காகவும்கூட இதனையே கம்யூனிஸ்டுகளுக்கான புதிய தரமாக கருதவேண்டும் என்று அவர் கூறினார்.

### புரட்சியின் மூலம் சீன மக்கள் முதலாளித்துவத்தை தூக்கியெறிந்து சோசலிசத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும்

மொத்த பிரச்சினையும் தோன்றியது இவ்வாறுதான். கட்சியும் புரட்சியும் திருத்தல்வாதத்தின் கட்டுப்பாட்டிற்குள் போவதையும் தடுக்க இயலாதவர்களாக இருந்தமைக்காகவும் கடைசியில் சோசலிசத்திற்கு பதிலாக முதலாளித்துவம் வந்ததை அனுமதித்ததற்காகவும் சீன மக்கள் எக்கச்சக்கமான விலையை தற்போது கொடுத்து வருகின்றனர். இவற்றின் தொடர் விளைவாக முதலாளித்துவம் சிக்கியுள்ள நெருக்கடிகள் அனைத்தும் சீனப்பொருளாதாரத்தையும் இறுகப்பற்றியது. இது சீன மக்கள் வாழ்வில் கடும் பிரளயங்களை ஏற்படுத்திவருகிறது. இது மார்க்சிசத்தின் மற்றொரு அடிப்படை மொழிதலையும் மறு நிரூபணம் செய்கிறது.

இப்பூவுலகில் உள்ள ஒவ்வொன்றும் இயற்கை விதிகளால் ஆளப்படுகிறது என்பதும் ஒவ்வொரு நிகழ்விலும் காணப்படும் தவிர்க்கஇயலா இவ்வியற்கை விதிகளை யாராலும் முந்திச்செல்ல முடியாது என்பதுமே அவ்வடிப்படை மொழிதலாகும். மாவோவின் தலைமையில் சீனம் மாபெரும் பெயர் பெற்று விளங்கியமைக்குக் காரணம் சோசலிசம் மற்றும் சமூக முன்னேற்றத்தின் விதிகளை அவர் சரிவர கையாண்டதேயாகும். சீனப் பொருளாதாரம் இன்று தலைகுப்புற கவிழ்ந்ததற்குக் காரணம் முதலாளித்துவ பாதையாளரான டெங்கும் அவரைப் பின்தொடர்ந்து வந்தவர்களும் மார்க்சியப்பாதையிலிருந்து விலகி சோசலிசத்தை ஆளும் இயற்கை விதிகளுக்கு எதிராக செயற்பட்டதாலுமேயாகும். எனவேதான், அரசியல் பொருளாதாரத்தின் நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கேற்ப எதிர்ப்புரட்சி மூலம் சோசலிசத்தை வீழ்த்தி முதலாளித்துவம் அதிகாரத்திற்கு வந்தது.

கடந்த கால தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்று மார்க்சிசம்–லெனினிசம்–மாசேதுங் சிந்தனையின் அடிப்படையில் சரியானதொரு புரட்சிகர கட்சியை கட்டியமைக்கும் கடமையை சீன உழைக்கும் வர்க்கம் சிரமேற்கொள்ளவேண்டும். வர்க்க வெகுஜன போராட்டங்களை உக்கிரப்படுத்தி அவற்றின் முடிவில் புரட்சியின் மூலம் சுரண்டல் முதலாளித்துவத்தை தூக்கியெறிந்து இழந்த சோசலிசத்தையும் முன்னேற்றத்தையும் கௌரவத்தையும் மீட்கவேண்டும்.

சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா, தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: வி பி நந்தகுமார் , அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 112 அச்சகம் : அய்யனார் ஆப்செட் எண் 10, சுப்பாராவ் நகர், சூளைமேடு, சென்னை 600 094, ஆசிரியர்: வி பி நந்தகுமார்

Published by: V P Nandakumar on behalf of Socialist Unity Centre of India, Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 112 and Printed at Aiyanar Offset, No.10, Subha Rao Nagar, Choolaimedu, Chennai 600 094. Editor : V P Nandakumar
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : www.sucicommunist.org